உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 19 வியாழக்கிழமை (05-12-2002)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:09

## உள்ளக சுயநிர்ணய உரிமையுடன்

# சுயாட்சி முறை தீர்வுத் திட்டம்

## உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியாகும்!

ஒஸ்லோ,டிசெ.5

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையப்போகும் அரசியல் தீர்வுத் திட்டத்தின் அடிப்படை வடிவமைப்பை உருவாக்குவதில் காணப்பட்டிருக்கும் இணக்கம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று நோர்வேயில் வெளியிடப்படும்.

நோர்வே நேரப்படி இன்று முற்பகல் 10.30 மணிக்கு (இலங்கை நேரம் பி.ப 3.30) இடம்பெறவுள்ள பத்திரிகையாளர் மாநாட்டில் அரசுக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் புலிகள் தரப்புக் குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கமும் உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுப்பர் என்று ஒஸ்லோவில் தங்கியுள்ள 'உதயன்' விசேட பிரதிநிதி நேற்று நள்ளிரவு தெரிவித்தார். (ஐ)

## அடிப்படை வடிவமைப்பை உருவாக்க ஒஸ்லோவில் அரசு - புலிகள் இணக்கம்

ஒஸ்லோவிலிருந்து ந.வித்தியாதரன்

ஒஸ்லோ,டிசெம்பர்5

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையப்போகும் அரசியல் தீர்வுத் திட்டத்தின் அடிப்படை வடிவமைப்பை (Frame Work) உருவாக்குவதில் அரசுத் தரப்பும் புலிகள் தரப்பும் இணக்கம் கண்டுள்ளன.**

**அது பெரும்பாலும் - உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி முறை என்ற - வடிவமைப்பில் இருக்கும்.**

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் மூன்றாம் சுற்று சமாதானப் பேச்சுக்களின்போது இவ்விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

நேற்று ஒஸ்லோ நேரப்படி நண்பகல் 12 மணிக்கு(இலங்கை நேரப்படி மாலை 5 மணிக்கு) - மூன்றாம் நாள் பேச்சுக்களின் காலை அமர்வு முடிவுற்றபின்னர் - புலிகளின் தரப்புக் குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கம் 'உதயனு'க்கு விசேட பேட்டி அளித்தார்.

தீர்வுத் திட்டத்தின் அடிப்படை வடிவமைப்புக் குறித்து ஆராயப்பட்

(02ஆம் பக்கம் பார்க்க)



ஒஸ்லோவில் நேற்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர் ஸனுடன் பீரிஸ், பாலா.



ஒஸ்லோவில் நேற்று கண்ணி வெடிகளுக்கு எதிரான மகஜர் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

## 11 லட்சம் கையொப்பங்களுடன் கண்ணிவெடிக்கு எதிரான மகஜர்

### ஒஸ்லோவில் பீரிஸ், பாலாவிடம் கையளிப்பு

உலகில் எந்த இடத்திலும் கண்ணி வெடிகளைப் புதைப்பதில்லை என்று உறுதியளிக்கும் 'ஒட்டாவா' கண்ணி வெடி உடன்படிக்கையில் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கைச்சாத்திடவேண்டும். 'இப்படிக் கோரும் மகஜர் ஒன்று 11லட்சம் பேரின் கையொப்பங்களுடன் ஒஸ்லோவில் பேச்சு நடத்தும் அரச குழுத் தலைவர் ஜி.எல்.பீரிஸிடமும் புலிகள் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கத்திடமும் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. சர்வமத சபையின் சார்பில் அசாஹிமாயக்க தேரர் தலைமையிலான குழு ஒன்று இந்த மகஜரைச் சமர்ப்பித்தது.

எல்லா மதங்களையும் சேர்ந்த பல தலைவர்களும் பொது மக்களும் இந்த மகஜரில் கையொப்பமிட்டிருக்கின்றனர். 'ஒட்டாவா' கண்ணிவெடி உடன்படிக்கையில் ஏற்கனவே பல நாடுகள் கையொப்பமிட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

11 லட்சம் பேரின் கையொப்பத்துடன் கூடிய மகஜரை ஜி.எல்.பீரிஸும் அன்ரன் பாலசிங்கமும் பெற்றுக்கொண்டதும் மகஜர் பற்றிச் சாதகமான முடிவுஎடுக்கப்படும் என்று தெரிவித்தனர். (ஐ)

## வாஜ்பாய்க்கு சந்திரிகாவின் செய்தி

புதுடில்லி,டிசெ.5

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பிரதிநிதிகளாக புதுடில்லி சென்றிருந்த தூதுக்குழுவினர் நேற்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை சந்தித்து அவருடன் பேச்சு நடத்தினர்.

தூதுக்குழுவிற்கு தலைமை வகித்துச் சென்றுள்ள அனுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் செய்தி ஒன்றை பிரதமர் வாஜ்பாயிடம் கையளித்தார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் கூட்டத்தில் இந்தியா கலந்து கொள்ளாததையிட்டு தூதுக்குழுவினர் வாஜ்பாயிடம் தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்தனர். (ஜ-4)

## உப குழு உறுப்பினர்களது எண்ணிக்கை பத்தாகின்றது

### இருதரப்புகளிலும் மேலதிகமாக தலா ஒருவர்

ஒஸ்லோ,டிசெ.5

வடக்கு-கிழக்கில் உடனடியாகச் செய்யவேண்டிய மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்கும் உபகுழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை எட்டிலிருந்து பத்தாக உயர்த்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கின்றது.

ஒஸ்லோவில் நடைபெற்றுவரும் அரச - புலிகள் சமாதானப் பேச்சுக்களின் மூன்றாம் நாளான நேற்றுக் காலை அமர்வின்போது இது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### நகரில் நேற்று மாலை கோர விபத்து:

## லொறியினால் மோதுண்ட யுவதி சில்லுகளிடையே சிக்கி மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்நகரில் சனசந்தடி - மிகுந்த கஸ்தூரியார் வீதியில் - நேற்று மாலை நிகழ்ந்த வீதி விபத்தில் யுவதி ஒருவர் லொறிச் சில்லினுள் நசியுண்டு உயிரிழந்தார்.

மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கோரவிபத்தில் யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த குருநாதபிள்ளை யோகராணி (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்நகரில் புடைவைக் கடை ஒன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு சர்வதேச பயங்கரவாதிகளுடன் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்களில்லை!


### ஜப்பானில் பிரதமர் அறிவிப்பு; சுதந்திரப் போராட்டக்காரர்கள் என்கிறார்

ரோக்கியோ,டிசெ.5

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அல்கெய்டா போன்ற சர்வதேச பயங்கரவாத இயக்கங்களுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானில் அறிவித்தார். புலிகள் இயக்கம் தமது மக்களின் சுதந்திரத்துக்காக உள்நாட்டிலேயே ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தியது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஜப்பான் தலைநகரான ரோக்கியோவில் இம்பீரியல் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற பகல் போசன விருந்தின்பின் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் இவற்றைத் தெரிவித்தார்.

சர்வதேச மட்டத்தில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. அல்கெய்டா போன்ற சர்வதேசப் பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதாக நம்பப்படும் இன்றைய அடிப்படையில் ஆயுதம் ஏந்திப் போராடும் பயங்கரவாத இயக்கம் சமாதான வழிகளில் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வந்துள்ளதை நம்ப முடியுமா? என்று பிரதமரிடம் வினவப்



(14ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# துணைநிலை மருத்துவ அலுவலர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் வேலை நிறுத்தம்

## பல நூற்றுக்கணக்கான நோயாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.போதனா வைத்தியசாலை துணைநிலை வைத்திய உத்தியோகத்தர்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தால், பல நூற்றுக்கணக்கான நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.


இந்த வேலைநிறுத்தத்தால் எக்ஸ்-ரே பிரிவு, ஆய்வுகூடப் பிரிவு, இயன் மருத்துவப் பிரிவு, மருந்து விநியோகப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளும் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன.

சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான கிளினிக் நோயாளர்களும் ஆயிரத்துக்கதிகமான வெளி நோயாளர் பிரிவு நோயாளர்களும் வைத்திய சேவையைப் பெற்றுக்கொண்டபோதிலும் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் பெரும் அவஸ்தைக்குள்ளானதைக் காணமுடிந்தது.

நோயாளர்களில் வசதிபடைத்த சிலர் வைத்தியர்களின் சிகிச்சைக் குறிப்பினைக் காட்டி தனியார் மருந்தகங்களில் தமக்குரிய மருந்து வகைகளைப் பெற்றுக்கொண்டதையும் - ஏனைய நோயாளர்கள் என்ன செய்வதென்றுதெரியாத நிலையில் காலை முதல் மாலை வரை ஆஸ்பத்திரி மருந்தகத்துக்கு முன்னால் வரிசையில் நின்று காத்துவிட்டு வீடு திரும்பியதையும் காணமுடிந்தது.

இதேபோல் 'வார்ட்டுகளில்' சிகிச்சை பெற வந்தவர்களுக்கும் வைத்தியர்கள் உரிய சேவையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இதேவேளை மேற்படி வேலை நிறுத்தப் போராட்டம் இன்றும் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-15-12-139)



யாழ்.ஆஸ்பத்திரியில் துணைநிலை மருத்துவர்கள் மேற்கொண்டிருக்கும் வேலைநிறுத்தம் காரணமாக நேற்று ஆஸ்பத்திரி மருந்து விநியோகப் பகுதி, வெளிநோயாளர் பிரிவு என்பன வெறிச்சோடிக் கிடந்த காட்சி.

(படங்கள் : பத்மராஜ்)

# யாழ்.கோட்டைப் பிரதேசம் புதர் மண்டிக் கிடக்கிறது

## விஷ ஜந்துகள் பெருகும் ஆபத்து

யாழ்.டச்சுக் கோட்டை, முற்ற வெளி, முனீஸ்வரன் கோயில் ஆகிய இடங்களை அண்டிய நகரின் மையப் பிரதேசம் பற்றைகள் வளர்ந்து புதர் மண்டிக் கிடக்கிறது.

இதனால் பாம்பு போன்ற விஷ ஜந்துகள் அடிக்கடி அங்கிருந்து வெளிப்பட்டு வீதிகளுக்கு வருவதாகவும் -

அவற்றைக் கண்டு பாதசாரிகளும் இப்பிரதேசத்தைப் பார்வையிட வரும் தென்பகுதி உல்லாசப் பயணிகளும் பெரும் பீதி அடைகின்றனர் என்றும் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

யாழ்.கோட்டையை அண்டிய பிரதேசம் இப்போது சனநடமாட்டம் மிகுந்த பகுதியாக மாறி வருகின்றது. இதனால், இப்பிரதேசத்தை தூய்மைப்படுத்தி பேணுவது அவசியம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

யாழ். மாநகரசபை அதிகாரிகள் இதுவிடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நகரவாசிகள் கூறுகின்றனர். (ஐ-17)

# பழஞ்சோறு உண்ட ஐவர் வாந்திபேதிக்கு இலக்காகினர்!

## புதுக்குடியிருப்பிலிருந்து யாழ்.ஆஸ்பத்திரிக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.5

இடித்த சம்பலுடன் பழம்சோறு உண்டவர்கள் திடீரென வாந்திபேதி நோய்க்கு இலக்காகினர்.

விசுவமடு, கண்ணகிபுரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐவர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிவராசலிங்கம் திருமகள்(வயது-34) இவரது பிள்ளைகளான சிவராசலிங்கம் பிரசாந்தன்(வயது-8) சிவராசலிங்கம் கிரிசாந்தன் (வயது-5) இராசையா விஜயராசா (வயது-27) ரவீந்திரராசா சயந்தன் (வயது-9) ஆகிய ஐவருமே நோயினால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

ஐவரும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உணவில் ஏற்பட்ட நச்சுத்தன்மையே இதற்கான காரணம் என வைத்திய வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (எ-15)

## கல்மடு விபத்தில் சிறுவன் படுகாயம்

கிளிநொச்சி கல்மடுப்பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 6 வயதுச் சிறுவன் தலையில் படுகாயமடைந்தான்.

கல்மடுவைச் சேர்ந்த சசிகுமார் நிஷாந்தன் (வயது6) என்ற சிறுவனே படுகாயமடைந்தவனாவான். இவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளான். (எ-15)

# சுயாட்சி முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது பற்றியும் அப்போது அவர் தகவல் வெளியிட்டார். அவர் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து இலங்கை மக்களுக்கு - குறிப்பாக சிங்கள மக்களுக்கு - தவறான கருத்துக்கள் கூறப்பட்டுவந்தன.

புலிகள் அமைதிப் பேச்சுக்கு வரமாட்டார்கள் என்றார்கள்; புலிகள் ஆயுதமோதலை நிறுத்தமாட்டார்கள் என்றார்கள்; புலிகள் அரசியல் தீர்வு குறித்து பேச முன்வரமாட்டார்கள் என்றார்கள்; புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைத் தவிர்த்து ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண முன்வரமாட்டார்கள் என்றார்கள்.

இவற்றையெல்லாம் பொய்யாக்கி, அமைதி வழியில் சமாதானத் தீர்வு காண்பதில் புலிகள் அதீத ஈடுபாடு கொண்டுள்ளார்கள் என்பதை நாம் எமது நடவடிக்கைகள், செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகின்றோம்.

இப்போது அரசியல் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்து பேசும் நிலைக்கு முன்னேறிவிட்டோம். அந்தப் பேச்சைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வசதியாக ஓர் அடிப்படை கட்டமைப்பை (Frame Work) நாம் அடையாளம் காணவேண்டும். அது குறித்தே இன்று (புதன்கிழமை) காலை நடைபெற்ற பேச்சுக்களில் விரிவாக ஆராய்ந்தோம். இதற்கான முன்மொழிவை தலைவர் பிரபாகரன் ஏற்கனவே தமது மாவீரர் தின உரையில் தெளிவாக வெளிப்படுத்திவிட்டார். அது உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி அடிப்படையிலானது. அதை அடிப்படைக் கட்டமைப்பாகக் கொள்ளும் இணக்க நிலை காலைப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ளது. எனினும், தொடர்ந்து மாலையிலும் அது குறித்து விரிவாக ஆராய்வோம். உத்தியோகபூர்வமான - உறுதியான - அறிவிப்பு பெரும்பாலும்(இன்று) புதன்கிழமை மாலை 6 மணிக்கு(இலங்கை நேரப்படி இரவு 11 மணிக்கு) பேச்சுக்கள் முடிவுற்ற பின்னர் வெளியிடப்படும் என நீங்கள் எதிர்பார்க்கலாம்.

அரசியல் தீர்வுக்கான அடிப்படைக் கட்டமைப்பை நாம் வகுத்துக்கொண்டாலும் அந்த வழியில் தொடர்ந்து பேச்சு நடத்தி இறுதித் தீர்வு ஒன்றை நாம் எட்டுவதற்கு நீண்டகாலம்பிடிக்கலாம்.

அதுமட்டுமல்ல. அத்தகைய தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கு அரசமைப்பை மாற்றவேண்டியிருக்கும்; அரசமைப்பை மாற்றுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கினரின் ஆதரவு அவசியம். ஆனால், அத்தகைய அரசியல் அதிகாரத்தோடு இந்த அரசு இல்லை: இதனால் எட்டப்படும் தீர்வை நடை முறைப்படுத்தும் வாய்ப்பு கேள்விக்குள்ளாவதைத் தவிர்க்க முடியாது.

அரசமைப்பை மாற்றுவதற்குத் தேவையான அரசியல் அதிகாரத்தைக் கொண்டிராத ரணிலின் அரசு, இப்போது புதிய சவாலையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றது.

டிசெம்பர் 5ஆம் திகதியான இன்று முதல், தற்போதைய அரசை எந்த நேரத்திலும் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி குமாரதுங்க பெறுகிறார். சந்திரிகா குமாரதுங்க எப்படி நடந்து கொள்வார் என்பதை யாரும் முன் கூட்டியே எதிர்பார்க்கமுடியாது. அவர் எந்த நேரத்திலும் எதையும் செய்யக்கூடியவர். எனவே ரணிலின் அரசு பாதுகாப்பற்ற நிலைக்கு (Insecure) - ஸ்திரமற்ற ஸ்தானத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் அமைதி முயற்சிகளுக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு - என்றார் பாலசிங்கம்.

"ரணிலின் அரசு ஸ்திரமற்ற நிலைக்குள் பிரவேசிப்பது குறித்து நீங்கள் கவலை கொள்கிறீர்களா?" (Are you Concern about that) - என்று அவரிடம் கேட்கப்பட்டது.

"அது குறித்துக் கருத்துக்கூற விரும்பவில்லை" (I don't want to Comment on that) - என்று பதிலளித்தார் பாலசிங்கம்.

(ஐ)

## பாதுகாவலர் சங்கத்தின் ஏற்பாட்டில்

# செயலகம் முன்பாக மறியல் மூன்றாவது நாளாக நீடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் யாழ்.செயலகத்துக்கு முன்பாக மேற்கொண்டுவரும் மறியற் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது. இதனால் நேற்றும் செயலகப் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

வருட இறுதி ஆகையால் நிதி தொடர்பான நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ள போதும் இம்மறியற் போராட்டத்தினால் மேற்படி பணிகளை மேற்கொள்ள முடியாது போய்விட்டதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தங்கள் போராட்டம் நாளையும் தொடரும் என பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் அறிவித்திருக்கின்றனர்.

(எ-8-51-15)

# ஒரு வழக்கிலிருந்து ஜெயா மாஸ்டர் விடுதலை

யாழ்ப்பாணம்,டிசெ.5

கடந்த ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' நிகழ்வின்போது யாழ்.வீரசிங்கம் மண்டபப் பகுதியில் பிஸ்டலுடன் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்பட்டு, பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டபின்பு யாழ். நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புளொட் அமைப்பின் யாழ்மாவட்ட உறுப்பினர் ஜெயச்சந்திரன் (ஜெயா மாஸ்ரர்) நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆயினும், 1999ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நெல்லியடிப் பகுதியில் இளைஞர் ஒருவர் கோரமாகக கொலை செய்யப்பட்டதுடன், அவரது துண்டிக்கப்பட்ட தலை யாழ். நகரப் பகுதியில் வீசப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் பருத்துறை நீதிமன்றினால் இவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று இவர் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து 'பிஸ்டல்' வைத்திருந்த வழக்கில் இருந்து இவரை விடுதலை செய்த நீதிவான், புளொட் உறுப்பினரான இவர் யாழ் மாநகர சபை உறுப்பினராகவும் இருப்பதால் அவருக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்குமாறு யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குப் பணிப்புரை விடுத்தார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கியையும் தோட்டாக்களையும் பலாலி இராணுவத் தலைமையகப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்து அது தொடர்பான அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் விக்னராஜா பொலீஸ் பொறுப்பதிகாரிக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இவர் கைத்துப்பாக்கி வைத்திருப்பதற்கான அனுமதியை பலாலி இராணுவத் தலைமையகமே வழங்கியிருந்தமையினாலும் -

பொலீஸார் இதுகுறித்து எவ்வித குற்றப் பத்திரத்தையும் நீதிமன்றில்கை தாக்கல் செய்யாததை அடுத்தும் இவரை விடுதலை செய்வதாக நீதிவான் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

(எ-10)

## ரமழானை முன்னிட்டு

# முஸ்லிம் குடும்பங்களுக்கு பொலீஸார் உணவுப் பொதி

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.பொலீஸ் நிலையப் பொலீஸார் ஏற்பாடு செய்த ரமழான் நிகழ்வுகள் நேற்று மாலை நாவாந்துறை முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் காங்கேசன்றை பொலீஸ் நிலைய பிரதம இன்ஸ்பெக்டர் புஸ்ஸல்லா, யாழ்.பொலீஸ் நிலைய தலைமைப் பொலீஸ் அதிகாரி ஆனந்த செனவிரத்ன, உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜே.குணதிலக, பொலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மசிறி, உதவிப் பொலீஸ் அதிகாரி பேமரத்ன, உதவிப் பொலிஸ் அதிகாரி லயனஸ் ஜெயசேகர மற்றும் உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ரவ்டை உட்பட மற்றும் பல பொலீஸ் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் மக்களுக்கு பொலீஸார் உலர் உணவுப் பொதிகளை வழங்கினர்.(எ-9)





ரமழான் நிகழ்வின் ஆரம்பத்தில் 'குர் ஆன்' ஓதப்படுவதை முதலாவது படத்திலும் - யாழ்.பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஹெக்டர் தர்மசிறி குடும்பத் தலைவி ஒருவருக்கு உலர் உணவுப் பொதி வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள் : வசந்தன்)*



கிழக்குத் திமோரில் நாடாளுமன்றக் கட்டடத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உயர்தரப் பாடசாலை மாணவர்களில் ஒருவரைப் பொலீஸார் கைதுசெய்து இழுத்துச்சென்ற காட்சி.

# கி.திமோர் கலவரத்தில் இரு மாணவர்கள் பலி!

டிலி,டிசெ.5

இந்தோனேஷியாவில் இருந்து பிரிந்து தனிநாடான கிழக்குத் திமோர் தலைநகர் டிலியில் இரண்டு நாள்களாகத் தொடர்ந்த மாணவர் ஆர்ப்பாட்டத்தின்போது குறைந்தது இருவர் கொல்லப்பட்டனர்.

அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே அமைதியான முறையில் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். செவ்வாய்க்கிழமை அவர்களில் சிலரை பொலீஸார் கைது செய்தனர். இதனையடுத்து வன்முறை வெடிக்க ஆரம்பித்தது.

மாணவர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. நேற்றும் இந்த வன்முறைகள் தொடர்ந்தன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைநகர் டிலியில் உள்ள ஹோட்டல்களும் கடைகளும் சூறையாடப்பட்டன. சுப்பர்மார்க்கெட் ஒன்று 500இற்கும் மேற்பட்ட மாணவர்களால் தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

கலவரத்தில் 16 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்தான். 6 துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் அவை கூட்டத்தில் இருந்தா பொலீஸ் தரப்பில் இருந்தா சுடப்பட்டன என்பது தெரியாது என்றும் கூறப்பட்டது.

அதிபர் சனாவோ இஸ்மாவோ கலவரம் நடைபெற்ற இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். (ம)

# ரஷ்ய அதிபர் புடின் இந்தியாவுக்கு விஜயம்

புதுடில்லி,டிசெ.5

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் நேற்றுமுன்தினம் இரவு இந்தியா வந்து சேர்ந்தார்.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் அங்கிருந்து இந்தியாவுக்கு வந்தார். அவருடன் அவரது துணைவி லுயிட்மிலா, வெளியுறவுத்துறை அமைச்சர் இகோர் இவானோவ் உட்பட உயர்மட்டத் தூதுக்குழுவினரும் வந்திருந்தனர்.

விமான நிலையத்தில் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

புடினின் இந்த விஜயத்தின்போது உலகளாவிய தீவிரவாதம், இராணுவ மற்றும் பொருளாதார விடயங்கள் என்பன குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு நடத்தவுள்ளனர்.

பிரதமர் வாஜ்பாயை நேற்று உத்தியோகபூர்வமாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். தீவிரவாதத்தைக் கூட்டாக எதிர்க்கும் 'டில்லி பிரகடனம்' ஒன்றிலும் இரு தலைவர்களும் கையெழுத்திடவுள்ளனர். (ம)



இந்தியாவுக்கு வந்து சேர்ந்த ரஷ்ய அதிபருக்கும் அவரது மனைவிக்கும் நேற்றுமுன்தினம் இரவு பிரதமர் வாஜ்பாய் இராப்போசனம் வழங்கிக் கௌரவித்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

## ஹூட்டு - டுட்சி இன மோதல்கள் முடிவு

# யுத்தநிறுத்த ஒப்பந்தம் புருண்டியில் கைச்சாத்து

அருஷா,டிசெ.5

மத்திய ஆபிரிக்காவின் சிறிய நாடான புருண்டியில் ஹூட்டு மற்றும் டுட்சி இனத்தவர்களுக்கு இடையே இடம்பெற்று வந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில இரு இனத் தலைவர்களும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத திட்டுள்ளனர்.

புருண்டியில் ஹூட்டு இனத்தவர்கள் தான் பெரும்பான்மையினர். ஆனால், அந்த நாட்டு இராணுவத்தில் சிறுபான்மையினரான டுட்சி இனத்தவரின் ஆதிக்கமே அதிகம். இதனால் ஆட்சி அவர்களின் கைகளிலேயே இருக்கின்றது. இதனை எதிர்த்து ஹூட்டு புரட்சிப்படை கடந்த 9 ஆண்டுகளாகப் போராடி வருகின்றது. இந்த உள்நாட்டுப் போரால் அங்கு 3 லட்சம் மக்கள் உயிரிழந்தனர்.

இந்த உள்நாட்டுச் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக தன்சானியா நாட்டில் உள்ள அருஷா நகரில் ஆபிரிக்கத் தலைவர்களின் உச்சிமாநாடு நடந்தது. இதில் தென்னாபிரிக்கா, எதியோப்பியா, உகண்டா உட்பட பல ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

போர் நிறுத்தத்துக்கு இரு இனத் தலைவர்களும் சம்மதிக்காவிட்டால் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று ஆபிரிக்க நாடுகளால் எச்சரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இரு இனத் தலைவர்களும் போர்நிறுத்தம் ஒன்றுக்கு இணங்கினர்.

அதனைத் தொடர்ந்து ஆபிரிக்கத் தலைவர்கள் முன்னிலையில் போர நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த போர்நிறுத்த சமரச ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்போதைய டுட்சி இன அதிபர் தொடர்ந்து 18 மாதங்கள் பதவியில் இருப்பார். அதன் பின்னர் ஹூட்டு இனத்தைச் சேர்ந்த ஒருவர் அதிபராகப் பதவியேற்பார். (ம)

## பலஸ்தீனத்தில் பணியாற்றும்

# ஐ.நா. பணியாளர்களுக்கு இஸ்ரேலால் அச்சுறுத்தல்


ஜெருசலேம்,டிசெ.5

பலஸ்தீன கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள ஐநா. பணியாளர்களுக்கு இஸ்ரேல் அச்சுறுத்தலாகவுள்ளது என்று அங்குள்ள ஐ.நா.பணியாளர் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேலிய அரசுக்கு அக்குழு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. அதில் ஐ.நா. பணியாளர்களின் பாதுகாப்புக் கருதி மேற்குக்கரைப் பகுதியில் இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கையை நிறுத்தவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர் ஜெனின் நகரில் பிரிட்டனைச் சேர்ந்த ஐ.நா. பணியாளர் ஒருவர் இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்டார். இதனையடுத்தே ஐ.நா. பணியாளர் குழு இந்த மகஜரைச் சமர்ப்பித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக இஸ்ரேலிய இராணுவத்தின் வன்முறைகளையும் தொல்லைகளையும் ஐ.நா. பணியாளர்கள் கடந்து வந்துள்ளனர் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்த ஐ.நா.பணியாளரின் அடையாள அட்டை..

# அமெரிக்காவுக்கு ரஷ்யா கண்டனம்

மொஸ்கோ,டிசெ.5

சர்வதேச பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்கா தன்னிச்சையாக இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதை ரஷ்ய அதிபர் புடின் கண்டித்தார்.

## உலக அரங்கில்

சீனாவில் பீஜிங் நகரில் பல்கலைக்கழக மாணவர்களிடையே செவ்வாய்க்கிழமை அவர் பேசினார். ஈராக்மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எடுப்பதையே அவர் இவ்வாறு மறைமுகமாகக் குறிப்பிட்டார் என்று கருதப்படுகின்றது.

சர்வதேச நடைமுறைகளையும் ஒப்பந்தங்களையும் மதிக்காமல் அமெரிக்கா நடப்பது ஏற்கத்தக்கதல்ல. அதேபோல இரட்டை நிலையை பின்பற்றுவதும், பிரச்சினையைத் தீர்க்க இராணுவத்தைப் பயன்படுத்துவதும் ஏற்கக்கூடியதல்ல.

வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் அமைப்பில் (நேட்டோ) மேலும் சில நாடுகளைச் சேர்ப்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. மேலும் சில நாடுகளைச் சேர்ப்பதால் சர்வதேச சமநிலை ஏற்பாடது என்றார் புடின்.

பராக் நகரில் கடந்த மாதம் நேட்டோ தலைவர்கள் உச்சி மாநாடு நடந்தது. முன்னாள் சோவியத் நாடுகளான பல்கேரியா, ருமேனியா, ஸ்லோவாக்கியா, ஸ்லோவென்யா மற்றும் பால்டிக் நாடுகளை நேட்டோ அமைப்பில் சேர்த்துக்கொள்ள அவர்கள் முடிவுசெய்தனர்.

ஆனால், ரஷ்யா இந்த முடிவை எதிர்த்து வந்தது. பின்னர் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டது. (ம)


## வெள்ளை மாளிகைக்கு கிறிஸ்மஸ் மரம்

வாஷிங்ரன்,டிசெ.5

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட சிறப்பான ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரம் அமைப்பதற்காக 18 அடி உயரத்தில் பிர் மரம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. பாரம்பரிய வழக்கப்படி அதை குதிரை பூட்டிய வண்டியில் கொண்டு வந்தார்கள்.

இந்த மரத்தில் அமெரிக்கா முழுவதிலும் வசிக்கும் 400 வகையான பறவைகளின் பொம்மைகள் வைக்கப்படுகின்றன. (ம)



சிம்பாப்வே தலைநகர் ஹராரேக்கு தென்மேற்கே 550 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நகர் ஒன்றில் எடுக்கப்பட்ட படம் இது. சூரியகிரகணம் நிகழ்வதை மிக தத்ரூபமாக எடுத்துக் காட்டுகின்றது.

# பேரழிவு தரும் ஆயுதங்கள் ஈராக்கிடம் இருக்கின்றன

## அமெ. பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

வாஷிங்ரன்,டிசெ.5

ஈராக்கிடம் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருக்கின்றன என்பது அமெரிக்காவுக்குத் தெரியும். அதனை ஏற்றுக்கொண்டு நிருப்பிக்க வேண்டிய பொறுப்பு ஈராக்கிடமே உண்டு. அதனை நிருபிக்கவேண்டும் என்று ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்களுக்குத் தேவையில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனொல்ட் ரம்ஸ்பீல்ட், வாஷிங்ரனில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈராக் தன்னிடம் உள்ள ஆயுதங்களின் முழு விவரங்களையும் ஐநாவிடம் வெளியிடவேண்டிய காலக்கெடு முடிவதற்கு இன்னும் சில தினங்களே இருக்கையில் ரம்ஸ்பீல்டின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

"தனது ஆயுத விபரங்கள் குறித்து ஈராக் வெளியிடும் தகவல்கள் பொய்யாக இருந்தால், இதற்கு முன்னர் இந்த விடயத்தில் ஐ.நா. நடந்து கொண்டதைபோன்று தற்போது நடந்து கொள்ளப்போகின்றதா?

"அல்லது ஐ.நா.வில் உறுப்புரிமை கொண்ட நாடுகள் ஈராக்கின் அந்த கைய செயலை ஏற்றுக்கொள்ளுமா?" - என்று கேள்வி எழுப்பினார் ரம்ஸ்பீல்ட்.

ஈராக் ஐ.நாவிடம் சமர்ப்பிக்கும் ஆயுத அறிக்கையில் பேரழிவு தரும் ஆயுதங்களின் விவரம் இல்லையென்றால் அமெரிக்கா என்ன செய்யும் என்று எந்த சமிக்ஞைகளையும் ரம்ஸ்பீல்ட் தெரிவிக்கவில்லை. (ம)

# சாயி நிலையத்தில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல்3.30 மணிக்கு பஜனையும் அதனைத் தொடர்ந்து உலகவங்கியின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தரான திருமதி கமலாம்பிகை ரங்கநாதனின் "சாயியின் மகிமையும் அனுபவங்களும்" என்னும் தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறும். (ஓ)

# விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசாங்கம் நீக்கவேண்டும்!

## "விடுதலைச் சிறுத்தைகள்" செயலாளர் திருமாவளவன் கோரிக்கை

சென்னை,டிசெ.5

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை மத்திய அரசு நீக்கவேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் இரா.திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர் கூறியதாவது:-

எனது யாழ்ப்பாணப் பயணம் மறக்கமுடியாத வரலாற்று அனுபவம். புதிய சமுதாயத்தையே படைக்க வேண்டிய நிலையிருக்கிறது. நோர்வே நாட்டு முயற்சியால் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நல்லிணக்கச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப்புலிகளின் இராஜதந்திர அணுகுமுறைக்கு கிடைத் வெற்றி இது.

யாழ்ப்பாணப் பகுதி மறு கட்டமைப்புக்கு உலக நாடுகள் நிதியுதவி செய்ய முன்வந்துள்ளன. இந்திய அரசும் தனது பங்கை நல்கவேண்டும்.

தமிழ் நாட்டிலும் நிதி திரட்டி அனுப்பவொரு குழுவை அமைக்க விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் முயற்சி எடுக்கும். யாழ்ப்பாணத்தில் 50 சதவீத மக்கள்தான் உள்ளனர்.

அவர்களிடம் இந்திய உணர்வுகள் அதிகம் உள்ளது. வன்னிப் பகுதி முழுவதும் விடுதலைப் புலிகளின் ஆட்சி நிர்வாகத்தில் உள்ளது.

போரில் இறந்தவர்களின் பிள்ளைகளை வளர்க்க, படிக்கவைக்க தனிப் பாடசாலைகள் அங்கே தொடங்கப்பட்டுள்ளன - இவ்வாறு அவர் கூறினார். (ஓ)

## மருத்துவ உரிமத்துக்கு விண்ணப்பிக்க இன்றே கடைசி நாள்

யாழ்ப்பாணம், டிசெ.5

வன்னிப் பெருநிலப்பரப்பில் மருத்துவம் தொடர்பான தொழில்களை மேற்கொள்வோர் மருத்துவ உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்களை இன்று வியாழக்கிழமைக்கு முன்னதாக அந்தந்தப் பிரதேச இணைபாளர்களிடம் அல்லது மாவட்ட பணிமனைகளில் அல்லது கிளிநொச்சி நகரப்பகுதியில் அமைந்துள்ள நடுவப் பணியகத்தில் சமர்ப்பிக்குமாறு தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

அனைத்து மருத்துவ சிகிச்சை நிலையங்கள், ஆங்கில மருந்தகங்கள், சுதேச/ஹோமியோபதி/அக்குபஞ்சர் சிகிச்சை நிலையங்கள், சுதேச மருந்தகங்கள், சுதேச மருந்து உற்பத்தி நிலையம், கண்சிகிச்சை நிலையங்கள், பற்சிகிச்சை நிலையங்கள், விசேட சிகிச்சை நிலையங்கள், மருத்துவ ஆய்வுகூடம், பல்கட்டுமிடம், கண்ணாடி வழங்கும் இடம், நடமாடும் மருந்து விற்பனைகள ஆகியவற்றுக்கு மருந்து உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். (ஓ)

உ

சாயிராம்

## எட்டாவது பிறந்த தின வாழ்த்து

HAPPY BIRTHDAY



உடுப்பிட்டி ரஜினி பீடா ஸ்ரோர்ஸைச் சேர்ந்த

**திரு.திருமதி சுந்தரலிங்கம் - நிர்மலாதேவி**

தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## செல்வன் துஷாங்

அவர்கள் இன்று (05.12.2002) வியாழக்கிழமை தமது எட்டாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

துஷாந்தை அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் சீரோடும் சிறப்போடும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*ரஜினி பீடா ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி.*

V.சுந்தரலிங்கம் *உடுப்பிட்டி.* (11340)

**சாயி பஜனை**

02.01.2003இல் (வியாழன்) எமது இல்லத்தில் பிற்பகல் 2மணிக்கு சாயி பாபாவின் பஜனை நடைபெறும். அதில் சாயி அன்பர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ரஜினி பீடா ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி.* V.சுந்தரலிங்கம், *உடுப்பிட்டி.*

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மட்டுவில் சிரிக்க மண்ணில் 25 - 10 - 1936



மட்டுவில் கண்ணீர் விட விண்ணில் 05 - 12 - 1996

### அமரர் பொன்.நாகமணி அவர்கள்

(மட்டுவில் தெற்கு, வளர்மதி சனசமூக நிலைய நிறுவுநர்)

வளர்மதிக்கு வித்திட்ட பொன் விருட்சமே!
வானுயர அதை வளர்த்த பெருவிருட்சமே
கல்வி, கலை, விளையாட்டு மாதர் அபிவிருத்தி
கவினுற வளர்த்து நன் மட்டுவிலுக்கு நிழல் தந்த ஆல விருட்சமே!

நாகத்தின் மதிப்பு உயர்வது மணியால்
நமது மட்டுவிலின் மதிப்பு உயர்ந்தது உன் பணியால்
தன்நலம் கருதாது பொது நலத்தையே கருதும்
தகை சான்றோய் நின் புகழ் என்றும் வாழ்க!

மண்ணில் நீர் வாழ்ந்து ஆக அகவைகள் அறுபது
விண்ணில் நீர் சென்று இன்றுடன் அகவைகள் ஆறு
நீர் இறந்து அகவைகள் அறுநூறு ஆனாலும்
உன் நாமத்தை என்றும் உச்சரிக்கும் வளர்மதி சமூகமே!

மட்டுவில். (11230) மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையம்.



உதயன்

## களநிலை யதார்த்தம்

அரசு - புலிகள் இடையே நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களுக்கும் களநிலைமைக்கும் - அதாவது தமிழர் தாயகப் பிரதேசங்களில் காணப்படும் நிலைமைக்கும் - இடையே பெரிய இடைவெளி காணப்படுகிறது என்று கூறியிருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இராணுவம் நிலை கொண்டிருக்கும் பகுதிகளில் இருந்து - இராணுவத்தை விலக்க மக்கள் மீளக்குடியமர வகை செய்யும்படி நாங்கள் அரசிடம் திரும்பத்திரும்பக் கோரி வருகிறோம். ஆனால், களநிலையில் - யதார்த்தத்தில் - எல்லாமே வேறுவிதமாக இருக்கிறது - என்றும் பாலசிங்கம் அதிருப்தி வெளியிட்டிருக்கிறார்.

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை பூதாகாரமாக நிற்கிறது. அங்கு சிறிய பூகோளப் பரப்பில் சுமார் 40 ஆயிரம் இராணுவத்தினர் பொதுமக்களின் வீடுகள், பாடசாலைகள் மற்றும் கட்டடங்களை ஆக்கிரமித்து நிற்கின்றனர். அங்கு படைவிலகல் நடவடிக்கை மிகமிகச் சிறிய அளவிலேயே இடம்பெற்றுள்ளது. மக்களின் மீள்குடியமர்வு விவகாரம் பின்னடைவு கண்டுள்ளது என்று கூறியிருக்கும் பாலசிங்கம், அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் எனத் தெரிவித்து மக்கள் வாழ்விடங்களில் சென்று குடியமர்வதற்கு வடபகுதி படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உடன்படுகிறார் இல்லை. அவர் ஒரு கடும்போக்காளர் என்றும் சாடியிருக்கிறார்.

சில தினங்களுக்கு முன் பலாலியில் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் பங்குபற்றிய ஒரு கூட்டத்தில் படைத்தளபதி சரத் பொன்சேகா கூறிய சில கருத்துகளை இங்கு சேர்த்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே சுமார் 50 ஆயிரம் வீடுகள் குடியமர ஆள்களின்றி வெறுமையாகக் கிடக்கின்றன. உயர் பாதுகாப்பு வலயங்களில் குடியமர விரும்புவோரை ஏன் அந்த வீடுகளில் குடியமர்த்த முடியாது?

இவ்வாறு கேள்வி கேட்டு அரச அதிகாரிகள் இது பற்றி ஆலோசிக்கவேண்டும் - என்று யோசனை தெரிவித்திருந்தார் தளபதி.

தளபதி கூறுவது போன்று குடாநாட்டில் 50ஆயிரம் வீடுகள் குடியிருப்பாளர்கள் இன்றி இருக்கின்றன என்பதை சிவில் அதிகாரிகள் இன்னமும் உறுதி செய்யவில்லை. இந்த எண்ணிக்கை விவரத்தை அவர் எங்கிருந்து பெற்றார் என்பதும் புரியவில்லை.

குடாநாட்டில் மூன்றில் இருபகுதி பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற வரையறைக்குள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சமாதானத்துக்கான பேச்சுகள் தற்போது தொடர்கின்றன. எனினும், இராணுவத்துக்கு எதிரான அச்சுறுத்தல்கள் இதுவரை தணியவில்லை. இதனால் தான் உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவத்தினரை உடனடியாக அகற்ற முடியாது என்று தளபதி சரத் பொன்சேகா கூறுகின்றார்.

தளபதியின் இந்தக் கூற்றின்படி -

பலாலி கூட்டுத் தளத்தை உயர் இராணுவப் பிரதேசம் என்று கூறினால், அதனை இப்போதைக்கு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், குடாநாடு எங்கும் ஆங்காங்கே மக்கள் குடியிருப்புக்களை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு அவற்றை உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று பிரகடனம் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கின்றனர் புலிகள். சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கும் தீவுக் கூட்டங்களை அப்படியே உயர் பாதுகாப்பு வலயம் என்கிறது கடற்படை.

குடிசன அடர்த்தி மிகுந்த யாழ்.நகரின் மத்தியில் - இரண்டு பெரிய உல்லாச விடுதிகள் - பெரும் எண்ணிக்கையான கட்டடங்கள், வீடுகள் அடங்கிய பிரதேசம் ஓர் இராணுவ வளாகமாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.

குடாக்கடலை அண்டிய - மீனவர் குடியிருப்புக்கள் நிறைந்த - பெரிய கரையோரப் பிரதேசமும் இப்படித்தான்.

குடியிருப்புகளுக்கு மத்தியில் இப்படி தொட்டுத் தொட்டு எங்கு பார்த்தாலும் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் காணப்படுகின்றன. இந்த நிலைமையில் மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது முழுமை பெற முடியாது. இது யதார்த்தம். இதனையே அன்ரன் பாலசிங்கமும் வலியுறுத்தியிருக்கிறார்.

குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை என்ற விவகாரம் ஒஸ்லோ பேச்சுக்களில் பலமாக எதிரொலித்திருக்கிறது.

தீர்வுக்கான அடிப்படைகள் பற்றிய கலந்துரையாடல்களுக்கு நகர்வதற்கு முன்பாக இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டி இருக்கிறது. 'நடவடிக்கை எடுக்கிறோம்' என்று சம்பிரதாயத்துக்குக் கூறுவது போன்ற பதில்களை விடுத்து அரசு இது விடயத்தில் தெளிவான முடிவை அறிவிக்கவேண்டும். அதை செயலில் காட்டவேண்டும். இல்லையேல் சமாதான முயற்சிகளின் முக்கியமான - அடுத்த கட்ட - நகர்வுக்குக் குறுக்கே தடைக் கல்லாக இந்த விவகாரம் வந்து நிற்கப்போகிறது என்பது தெளிவு.

### ஓய்வுபெற்று பலர் செல்கின்ற நிலையில்

# இலங்கை இராணுவத்துக்கு ஆள்சேர்க்க முடியவில்லை!

## பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.5

இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுச் செல்பவர்களின் இடங்களுக்கு புதியவர்களை நியமிக்க முடியாத இக்கட்டு நிலையில் உள்ளோம். இராணுவத்தில் இணைய புதியவர்கள் முன்வராமையே இதற்குக் காரணம்.

- இப்படிக் கூறுகின்றார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன.

படைத்தரப்புக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இராணுவத்தில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமலுள்ளது. பதவிக்காலம் முடிந்தவர்களுக்கு ஓய்வுபெற்றுச்செல்ல அனுமதி வழங்குவதற்கும் முடியவில்லை. புதிதாக இராணுவத்துக்கு ஆள்சேர்க்க இயலாமையே இதற்குக் காரணம்.

புதிதாக ஆள்களைத் தெரிவுசெய்வதற்காக மூன்று தடவைகள் விண்ணப்பங்களைக் கோரியிருந்தோம்.

ஒரு தடவையில் 5 ஆயிரம் பேருக்குப் பயிற்சி அளிக்க வசதிகள் உள்ளன. இதன்படி ஒரு தடவை 5 ஆயிரம் பேரைத் தெரிவுசெய்ய முடிவுசெய்து விண்ணப்பம் கோரினோம். இதே போன்று மூன்று தடவைகள் விண்ணப்பம் கோரினோம். இதன் மூலம் 15ஆயிரம் பேரை இராணுவத்துக்குத்திரட்ட முடிவுசெய்திருந்தோம். ஆனால், மூன்று தடவைகளிலும் மொத்தமாக 3 ஆயிரம் பேரே விண்ணப்பித்திருந்தனர்.

இந்த நிலையில், இராணுவத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு ஆள்களை நியமிப்பது கடினமான விடயமாகவே உள்ளது - என்றார் அவர். (ஓ-3)

# மக்களின் உளரீதியான தாக்கமே படையில் சேர்வதைத் தடுக்கிறது!

## சமூகவியல் பேராசிரியர் விளக்கம்

கொழும்பு,டிசெ.5

மக்கள் மத்தியில் உளரீதியாக ஏற்பட்டுள்ள தாக்கமே இராணுவத்தில் சேர்வதற்கு ஆர்வம் குறையக் காரணம் என்று சமூகவியல் பேராசிரியரான பி.ஏ.தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்துக்கு ஆள்கள் சேர்வதில் உள்ள தடைகள் குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உளரீதியாகவே மக்கள் இராணுவத்தில் சேர்வதை விரும்புவதில்லை. இராணுவத்தில் புதிதாகச் சேர்ந்தவர்களிலும் அனேகர் எதுவித அறிவித்தல்களுமின்றித் தாமாகவே இராணுவத்தை விட்டு அகன்றுவிட்டனர். இராணுவத்தில் புதிதாகச் சேர்வதற்கு இளைஞர்களுக்கு அறவே நாட்டமில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

அநேகமான குடும்பங்களில் இராணுவச் சிப்பாய்களே தமது குடும்பத்தினருக்கு ஊதியம் தேடுபவர்களாகவுள்ளனர். அவ்வாறானவர்கள் போரில் ஈடுபட்டு இறந்தால், முக்கியமாக குடும்ப உறுப்பினர் இழப்பு மட்டுமன்றி அவர்களின் குடும்ப நிலையும் பாதிக்கப்படுகிறது. அடுத்து, இராணுவத்தில் வேதனம் திருப்தியானதல்ல. இராணுவம் ஒரு நிலையான நிரந்தரமான தொழில் எனவும் கொள்ளமுடியாது. மேலும் இராணுவத்தில் கடமை புரிபவர்கள் தாங்கள் விரும்பியபடி தமது வதிவிடங்களுக்கு மீளச் செல்லமுடியாது. நீண்டகாலமாக தமது குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களைப் பிரிந்து பல கஷ்டங்களையும் அச்சத்தையும் எதிர்நோக்கியவண்ணமே வாழவேண்டும். அது பொதுவாகவே எமது நாட்டுக் கலாசாரத்திற்குப் புறம்பான விடயம் என்ற பல காரணங்களாலேயே இராணுவத்தில் சேர்வதைப் பொதுவாக மக்கள் விரும்புவதில்லை - என்றார் அவர். (ஓ-3)

# அனுமதியற்ற கட்டடங்களை யாழ். மாநகரசபை அகற்றும்!

## எச்சரிக்கிறார் மேயர்

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எந்தவொரு கட்டட நிர்மாணப் பணிகளைச் செய்வதாயினும் முன் அனுமதி பெற்றே மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு முன் அனுமதிபெறாது கட்டப்படும் கட்டடங்கள் நஷ்டஈடு இன்றி அகற்றப்படும் என்று யாழ்.மாநகர முதல்வர் எஸ்.கந்தையன் தெரிவித்துள்ளார்.

அனுமதி இன்றிக் கட்டப்படும் கட்டடங்களை அகற்ற யாழ்.மாநகரசபைக்கு அதிகாரம் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டியே அவர் இவ்வறிவித்தலை விடுத்துள்ளார்.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலமாக பல திருத்தவேலைகள மற்றும் புதிய கட்டட நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் இதற்கு யாழ்.மாநகர சபையின் அனுமதிபெறப்படுவதில்லை.

பாடசாலைகள், கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங்கள், கோயில்கள்கூட இந்தத் தவறைச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இதுவரை அனுமதிபெறாதவர்கள் உடன் அனுமதி பெற்றுத் தமது நிர்மாண வேலைகளைத் தொடருமாறும் மாநகர முதல்வர் கேட்டுள்ளார். (ஓ-12)

### சமூக சேவைகள் திணைக்களத்தால்

# வறுமைக்கோட்டின் கீழுள்ள பெண்களுக்கு உதவித்திட்டம்

வலி.வடக்கு,டிசெ.5

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் நலத்துறை திணைக்களம் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தத் திட்டமிட்டுள்ளது. இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வறுமைநிலையில் உள்ள 50 வயதிற்கு உட்பட்ட விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு இத்திட்டத்தின்கீழ் சுயதொழில் முயற்சிக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இத்தகைய உதவியைப் பெறத் தகுதி உடையவர்களின் விவரங்களைத் தெரிவுசெய்து அனுப்பிவைக்கும்படி பிரதேச செயலர்கள் கோரப்பட்டுள்ளனர்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இத்தகையவர்கள் கிராம அலுவலர்களினால் தெரிவுசெய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ-86-175)

### நாளை

கார்த்திகை 20
வெள்ளிக்கிழமை
(06.12.2002)
திதி : துதியை
முற்பகல் 10.51 வரை
நட்சத்திரம்: மூலம்
முற்பகல் 10.03வரை.
றம்ழான் பெருநாள்
சுபநேரம் : 6.17 - 7.47
ராகுகாலம் : 10.47 - 12.17
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தவறாகப் பயன்படுத்தப்படும் பொறுமை சினமாக உருவெடுக்கிறது.

### 14 ஆண்டுகளின் பின்னர்

# காரைநகரில் திறந்த வீதி 4 மணி நேரத்தில் மூடப்பட்டது

காரைநகர்,டிசெ.5

காரைநகர் சுற்று வீதி, மக்கள் பாவனைக்காக கடந்த முதலாம் திகதி திறக்கப்பட்டு நான்கு மணித்தியாலத்தில் மீண்டும் மூடப்பட்டுவிட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்ட இவ்வீதியால் மக்கள் சென்று வர அனுமதிக்கப்பட்டனர். ஆயினும், அன்றையதினம் முற்பகல் 10 மணியுடன அப்பாதை மக்கள் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டது. தற்போது பயணிகள் அற்ற வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ்களே இவ்வீதி ஊடாக டிப்போக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றது.

கடந்த 14 ஆண்டுகளாக மக்கள் பாவனைக்கு தடைசெய்யப்பட்ட இவ்வீதி துப்புரவு பணிகள் நிறைவு பெறாததால் பயணிகள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. அடுத்த வாரம் தொடக்கம் பஸ்களில் பயணிகளை ஏற்றி செல்ல அனுமதிப்பதாக கடற்படையினர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலைக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-73)

### காணாமற் போனோர் சங்கத்தினர்

# மனித உரிமை அலுவலகம் முன் மறியல் நடத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.5


வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் பிரச்சினை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு மனிதாபிமான ரீதியில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் எனக் கோரி எதிர்வரும் 10ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு முன்பாகவும் மறியற் போராட்டம் நடத்தப்படவுள்ளது. காணாமற்போனோர் சங்கத்தினர் இதனைத் தெரிவித்தனர்.

எதிர்வரும் 10ஆம் திகதி உலக மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படவுள்ளது. எமக்கு இங்கே மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் இத்தினத்தைக் கொண்டாடுவது எவ்வகையிலும் அர்த்தமற்றது. ஆகவே, அன்றையதினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் முன்பாகவும் மறியற் போராட்டத்தை நடத்தவுள்ளோம். இப்போராட்டத்திற்கு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களும் மனிதநேய அமைப்புக்களும் ஆதரவு வழங்கவேண்டும்.

- இவ்வாறு அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஓ-8)

TVS

# உங்கள் தரிப்பிடத்தை அடையுமுன்பே மகிழ்ச்சியைக் கண்டடைவீர்கள்




2 வருடத்திற்கு /30,000கி.மீ உத்தரவாதம்

இலவச பிரயாண ஆடை

ரூபா. 82,000/- +VAT

TVS Victor
More smiles per hour

புதிய TVS விக்டர், ஒவ்வொரு சவாரியின் போதும் மகிழ்ச்சியைத் தருகிறது. செவ்வக வடிவத்திலான பெட்டி. இருமருங்கும் ஊசலாடும் கைப்பிடி. நீண்ட அகலமான இருக்கை. ஏனையவற்றுக்கு மத்தியிலும் இலங்கையின் பாதைகளூடாக சௌகரியமான சவாரிக்கு உத்தரவாதம். ஏனைய முக்கிய அம்சங்களோடு ஒவ்வொரு மைல்கற்களுக்குப் பிறகும் மகிழ்ச்சியை தக்கவைத்துக்கொள்ள உங்களால் முடியும்.

4 ஸ்ட்ரோக் 110 CC • ஒரு லீட்டருக்கு 85 கிலோமீற்றர் சிக்கனப்பயணம் • 8.1 B.H.P. • உயர்தர டிஜிட்டல் எரிபொருள் எரிவு • செவ்வக வடிவப் பெட்டியில் இருபுறம் ஆடும் கைப்பிடி • HI சக்தி கொண்ட பலதடவை பிரதிபலிக்கும் முகப்பு விளக்கு

மேலதிக விபரங்களுக்கு ஏகவிநியோகஸ்தர்கள்:

**சுசுகீ மோட்டர்ஸ் லங்கா லிமிடெட்**

795, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தைகொழும்பு-14
தொலைபேசி: 542883 பெக்ஸ்: 440889
(அங்கீகரிக்கப்பட்ட நாடுமுழுவதற்குமான விற்பனையாளர்கள்)

# தபால் திணைக்களத்தை நவீன மயப்படுத்துவதற்காக அது நியூசிலாந்து நிறுவனத்திடம் கையளிக்கப்படும்

**தற்போது தபால் திணைக்களம் செயற்றிறன் அற்றதாக, நஷ்டத்தில் இயங்கும் திணைக்களமாகச் செயற்படுகிறது. தபால் திணைக்களம் புனரமைக்கப்படவேண்டும் என்பதை தற்போதைய அரசும் முன்னைய அரசும் உணர்ந்துள்ளன. உலகில் திறம்பட தபால் சேவையை மேற்கொள்ளும் நியூசிலாந்து தபால் நிறுவனத்திடமிருந்து இது குறித்த அறிக்கையை அரசு பெற்றுள்ளது. இந்த அறிக்கைகளை ஏற்று அரசு நடைமுறைப்படுத்தினால் தபால் திணைக்களம் "ஸ்ரீலங்கா ரெலிகொம்" நிறுவனம் போன்று உருவாக்கப்படலாம். ரஞ்ஜித் ஆனந்த ஜயசிங்கா என்பவரால் எழுதப்பட்டு 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

**மாற்றார் தோட்டத்திலிருந்து...**

**தமிழில்: வீயெஸ்ரீ**

ஸ்ரீலங்கா தபாற் திணைக்களம் கடந்த பத்து ஆண்டுகளாகப் பெரும் நட்டத்தில் இயங்கிவரும் அரச திணைக்களமாகக் காணப்படுகின்றது. தற்போது மேற்கொள்ளப்பட்ட கணக்கின்படி கடந்த பத்து வருடகாலத்தில் தபால் திணைக்களத்துக்கு 400 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக இத்திணைக்களத்தைத் தொடர்ந்து இதே வகையில் இயங்க வைப்பது அரசுக்குப் பெரும் சுமையாக இருக்குமென முன்னைய அரசைப் போன்றே இந்த அரசும் சிந்திப்பதாகத் தோன்றுகிறது.

பொ.ஐ.முன்னணி அரசு மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் தபாற் திணைக்களத்தை ஒரு கூட்டுத்தாபனமாக மாற்றும் நோக்கில் நாடாளுமன்றத்தில் விசேட சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பித்தது. ஆயினும், பெரும் சர்ச்சைகளுக்கு ஆளான இத்தபாற் கூட்டுத்தாபன சட்டமூலத்துக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் பல ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

முடிவில் அது நாட்டின் அரசமைப்பு விதிகளுக்கு அமைவானதல்லவென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து தபாற் கூட்டுத்தாபனச் சட்டமூலம் கைவிடப்பட்டது. ஆயினும், தபாற் சேவையை தனியார் மயப்படுத்தாமல் அதன் தரத்தை உயர்த்துவது இயலாத விடயமென முன்னைய அரசு கூடக் கருதியது. தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் தபாற் திணைக்களத்தை புனரமைப்புச் செய்வது சம்பந்தமாகக் கவனம் செலுத்தியது. அதன் காரணமாக உலகளாவிய ரீதியில் உயர்மட்டத்தில் தபாற் சேவையை மேற்கொள்ளும் நாடுகளின் அனுபவங்களையும் அவர்களிடமிருந்து பெறக்கூடிய உதவிகளையும் பெற்றுக்கொள்ள அரசு முடிவெடுத்தது. கிடைக்கப்பெறும் தகவல்களின்படி இப்போது உலகில் சிறப்பான தபால் சேவை நியூசிலாந்து நாட்டிலேயே நடத்தப்படுவதாக அறியமுடிகிறது.

அதன்படி தபால்மா அதிபருக்கு தபால் முகாமைத்துவம் தொடர்பான அறிக்கை ஒன்றினைத் தயாரித்து வழங்குமாறும், தேவையான மீளமைப்பு நடவடிக்கைகளைப் பொறுப்பேற்குமாறும் நியூசிலாந்தின் தபால் நிறுவனத்தை அரச கேட்டுக்கொண்டது.

உலகப் பிரசித்திபெற்ற தபால் நிறுவனமான, நியூசிலாந்து தபால் நிறுவனத்தின் உத்தியோகபூர்வமான பெயர் "டிறான்ஸ் எண்ட் வேல்ட் லிமிட்டெட்" என்பதாகும். இதனை நிர்வகிக்கும் நிர்வாக சபையின் தலைவரான ஜிம்போல்யர் மூன்று ஆண்டுகள் நியூசிலாந்தின் பிரதமராகவும், ஏழு ஆண்டுகளாக அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்ததோடு, அமெரிக்காவில் நியூசிலாந்து நாட்டின் தூதுவராகவும் கடமையாற்றிய பிரபல பொருளாதார மற்றும் அரசியல் விற்பன்னருமாவார்.

ஸ்ரீலங்கா அரசினதும் மற்றும் இப்புனரமைப்பு நடவடிக்கையில் ஆலோசனை வழங்கும் தனியார் வங்கியினதும் வேண்டுகோளின்பேரில் கடந்த சில நாள்களின் முன்னர் ஸ்ரீலங்காவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜிம்போல்யர், ஸ்ரீலங்கா தபால் திணைக்களம் தொடர்பாகத் தமது ஆரம்ப அவதானிப்பு அறிக்கையை அரசிடம் கையளித்தார். மேலும் அவசியமாயின் மூன்று வார கால விசேஷ அவதானிப்பின் பின்னர் அதனை விட விரிவான அறிக்கையொன்றினைத் தயாரித்து வழங்குவதற்கும் ஒப்புக்கொண்டுள்ளார்.

நியூசிலாந்து தபால் நிறுவனம் தற்போது உலகம் பூராகவுமுள்ள 40 நாடுகளில் தபால் முகாமைத்துவத்தை மேற்கொண்டு வருகிறது. அவ்வாறான நாடுகள் பல தபாற் சேவையை புனரமைப்புச் செய்யும் பணியை உத்தியோகபூர்வமான வகையில் விரிவுபடுத்தியுள்ளன. தென்னாபிரிக்கா, ஆர்ஜன்ரீனா, போர்த்துக்கல், வியட்நாம், சீனா, மொன்டிநிருறோ மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இப்புனரமைப்பு நடைமுறைகள் இடம்பெற்றுவருகின்றன.

முழுமையான பங்குடைமைக்கும் அரசுக்கும் வரி செலுத்தும் நிறுவனமாக தபாற் திணைக்களம் மாற்றியமைக்கப்படவேண்டுமென நியூசிலாந்து றான்ஸ் என்ட் தபால் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப அவதானிப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவசியமாயின், தபால் நிறுவனத்தின் பங்குகளில் ஒரு பகுதியை வேறு நிறுவனங்களுக்கோ, அன்றேல் அரச ஊழியர்களுக்கோ கையளிப்பதற்கும் இந்த அறிக்கையில் இடமளிக்கப்பட்டுள்ளது. மற்றைய நாடுகளில் தபாற்சேவையில் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்ட விதத்தில் ஸ்ரீலங்கா தபாற்சேவை நட்டத்தில் இயங்குவதை தவிர்ப்பதற்காகத் தபாற் திணைக்களத்தின் சில பிரிவுகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் இந்த அறிக்கையில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தைப்படுத்தும் பிரிவு, நிதிப் பிரிவு, சாதாரண வியாபார நடவடிக்கை (சில்லறை வியாபார நடவடிக்கை) நிர்வாகப் பிரிவு மற்றும் மனித வளப் பிரிவு ஆகியவையே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவேண்டிய பிரிவுகளாகும். இப்பிரிவுகளின் நடவடிக்கைகள் தொடர்பாக, நியூசிலாந்து நிறுவனத்தின் ஆறு வெளிநாட்டு ஆலோசகர்கள் தனித்தனியாக மேற்கொண்ட அவதானிப்புக்களின் முடிவுகளின்படி அவ்வப் பிரிவுகளுக்கு மேற்கூறிய யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தபாற் திணைக்களத்தைப் புனரமைப்புச் செய்யும்வேளையில் அதனை வர்த்தக ரீதியிலான முன்னேற்றத்தை எட்டச் செய்வதே நிறுவனம் எதிர்பார்க்கும் இலக்காகும். தற்போது தபாற் திணைக்களத்தின் சில செயற்பாடுகள் பொதுச் சேவை நோக்கில் அமைந்துள்ளன. வருடமொன்றுக்குத் திணைக்களம் கையாளும் பலதரப்பட்ட 31கோடி தொகையான கடிதங்களில் குறிப்பிடத்தக்கதொரு தொகையான கடிதங்கள் அரச சேவையின் பொருட்டு கட்டணம் செலுத்தாது அனுப்பப்படும் தபால்களாகும். பிரதான தபாற்கந்தோர், உப தபாற்கந்தோர் என 4049 தபாற்கந்தோர்களின் ஊடாக இக்கடிதங்கள் விநியோகிக்கப்படுகின்றன. தபாற் திணைக்களத்தின் பல தரப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் வரையிலாகும்.

தபாற்சேவை வர்த்தக மயப்படுத்தப்படும்போது அரச சேவையின் பொருட்டு கட்டணமின்றிக் கடிதங்கள் அனுப்பும் நடைமுறை நிறுத்தப்படும். தம்மால் பெறப்படும் தபாற் சேவைக்காக அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்கள் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்படும். அந்த வகையான வர்த்தக ரீதியில் தபாற் சேவையை நடத்துவதற்காக நியூசிலாந்து றான்ஸ் என்ட் தபால் நிறுவனம் சில ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளது. புனரமைக்கப்படும் தபால் நிறுவனத்துக்கென தனியான நிதி பேணப்படல்வேண்டும். அவ்வாறே அரசுக்குச் செலுத்தப்படவேண்டிய கடனும் செலுத்தப்படவேண்டும். அரசுக்கு வரியும் இலாபத்தில் பங்கும் செலுத்தப்படுவதுடன் ஏனைய அரச திணைக்களங்களினின்றும் தபால் நிறுவனம் பெற்றுக்கொள்ளும் சேவைகளுக்கான கட்டணமும் செலுத்தப்படவேண்டும்.

இதனிடையே இப்புதிய தபால் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவேண்டிய மேலதிக செயற்பாடுகள் இத்திட்டயோசனைகளில் விவரிக்கப்பட்டுள்ளன. தபால் நிறுவனம் தனது ஆரம்ப நிதியை மிகவும் அவதானமாகவும், கட்டுப்பாட்டுடனும் செலவு செய்தல்வேண்டும். மேலதிக சேவைகளில் செலவிடுவதைத் தவிர்ப்பதுடன், தேவைக்கு மேலதிகமாக ஊழியர்களை வேலையில் அமர்த்துதலையும் தவிர்க்கவேண்டும். தபால் நிறுவன ஊழியர்களின் வினைத்திறன் அதிகரிக்கப்படல் மிக அவசியமாகும். வெளித்தலையீடுகள் எதுவுமின்றி, வேறெவ்விதமும் கடன்பெற்றுக்கொள்ளாமலும், தபாற் சேவையை இலாபமீட்டும் விதத்தில் நடத்துவதற்கு ஸ்ரீலங்கா தபாற் சேவைக்கு வகை ஏற்படுத்தப்படல் வேண்டும். அடிப்படை நிர்வாகத்தில் சிக்கல்கள் ஏற்பட இடமளித்தல் கூடாது.

மேற்கூறிய நடவடிக்கைகளை எவ்விதம் மேற்கொள்ளமுடியும் என்பது பற்றி பரிசீலித்துப் பார்ப்பதற்கு நியூசிலாந்து தபால் நிறுவனம் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. மேற்கூறிய நடவடிக்கைகள் தொடர்பாக அந்நிறுவனம் மூன்று வார கால அவகாசம் கோரியுள்ளது. அந்த அவதானிப்புகள் தொடர்பாகவும், தற்போது நடத்தப்படும் அவதானிப்புக்கள் தொடர்பாகவும் ஸ்ரீலங்கா அரசுக்கு நியூசிலாந்து தபால் நிறுவனத்தால் பரிந்துரைக்கப்படவுள்ள ஆலோசனைகள் தொடர்பாக நிகழ்ச்சிநிரலொன்று இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. வர்த்தக முக்கியத்துவம் மற்றும் நடைமுறை வியாபார நிலை என்பவற்றுக்கமைய தபாற் கட்டணங்கள் புதிதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி, சிறப்பான சேவையினை மேற்கொள்ளும் வகைகள பிரஸ்தாபிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.



ஆரம்பகால தபால்சேவகர்

வர்த்தக சந்தையில் ஸ்ரீலங்கா தபால் நிறுவனத்தின் நிலைமை பற்றி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச மட்டத்தில் நமது தபால் நிறுவனத்துக்கு ஏற்படும் பாதிப்பு பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தைப்படுத்தல் பிரிவு பற்றிப் பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பாவனையாளர்களின் ஆதரவு பெற்றுக்கொள்ளும் வகையான நிர்வாக முறை சம்பந்தமாக பரிந்துரை தெரிவிக்கப்பட்டுள்ளது. செலுத்தும் கட்டணத்துக்கு பாவனையாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் வகை பற்றி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கணக்கு வைத்துள்ளோருக்கும் வர்த்தகர்களுக்குமிடையே தொடர்பை வலுப்படுத்தக்கூடிய உபாய மார்க்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்காக தபாற திணைக்களம் பொது நிறுவனமாக மாற்றியமைக்கப்படல் வேண்டும் என்பது பற்றி வேண்டிய பல தரப்பட்ட ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு - காலி நகரங்களுக்கிடையே பயன்படுத்தப்பட்ட தபால் வாகனம்.



நியூசிலாந்தின் தபால் நிறுவனத் தலைவர் அரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தபாற் திணைக்களத்தை இலாபம் ஈட்டித்தரும் பொது நிறுவனமாக மாற்றியமைக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்துக்கு புதிய இலாபம் ஈட்டும் சந்தர்ப்பங்கள் உள்ளதெனவும், அவற்றை மேலும் உயர்ச்சி பெறச்செய்து மேலதிக லாபம் ஈட்டிக்கொள்ள முடியுமெனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் பிரிவையும், புள்ளிவிவரப் பிரிவையும் அமைத்து நவீன மயப்படுத்துவதோடு, உலகத்தின் இன்றைய தேவைகளைக் கருத்தில் கொண்டு தபாற்சேவை நடத்தப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியூசிலாந்து தபால் நிறுவனம் இது தொடர்பாக அரசுக்குச் சமர்ப்பித்த 16 பக்கங்களைக் கொண்ட அடிப்படை அவதானிப்பு அறிக்கையின்படி தமது நிறுவத்தின்கீழ் இரகசியமான முறையில் ஸ்ரீலங்கா தபாற்சேவை இணைக்கப்படவேண்டும் என்றில்லாமல், தபாற் திணைக்களத்தை அரச நிறுவனமாக அமைத்து (ரெலிகொம் நிறுவனம் போன்று) அதனுடைய நிர்வாகத்தை தம்மிடம் கையளித்தால் அவ்வாறு அதனை நிர்வகிப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தபாற் திணைக்களத்தை முற்று முழுதாகத் தனியார் மயமாக்கல் நடவடிக்கையைத் தாம் எதிர்பார்க்கவில்லை என நியூசிலாந்து தபால் நிறுவனம் கருதுவதாக அவர்களது அவ்வறிக்கையின் பிரகாரம் தெரிய வந்துள்ளது.

பாவனையாளர்களைப் பொறுத்தவரை தபாற் திணைக்களத்தை நிறுவனமாக மாற்றியமைப்பதால் தமது பார்சலையோ அன்றேல் பதிவுத் தபாலையோ அனுப்பவதற்கோ இப்போதுள்ளதைவிட அதிக கட்டணம் செலுத்த நேரிடலாம். அவ்வாறு கட்டண அதிகரிப்பு பற்றியும் அவ்வறிக்கையில் மேலோட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசுக்குக் கட்டணமின்றி வழங்கும் சேவைகளும் நிறுத்தப்படலாம். நிறுவனத்தைக் கொண்டு இயக்குவதற்கு மிக அவசியமான ஆளணி தவிர மேலதிகமாக உள்ள ஊழியர்களை விலக்கிக் கொள்வது பற்றியும் மேற்கூறிய அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பெருமதியான விடயமாகும். கடந்த காலத்தில் இந்த விதமாகத் தமது ரெலிகொம் சேவையை தனிப்பட்ட நிறுவனமாக மாற்றியமைத்த நாடுகளில் சோஷலிச கியூபா நாடும் ஒன்றாகும். அரசாங்க நிறுவனமாக இருந்தவரை கியூபாவில் ரெலிகொம் நிறுவனம் நட்டத்தில் இயங்கிவந்த காரணமாகவே அதனை அரசுடைமையுள்ள நிறுவனமாக மாற்றவேண்டி ஏற்பட்டது.

தனிப்பட்ட பிரிவுகளை நிர்வாகம் செய்யும் திறமைசாலிகளான நிர்வாகிகள் அரச செயற்பாடுகளில் பங்கு வகிக்கும் வகையிலான அரசும் தனியார் துறையும் இணைந்த கூட்டு நிறுவனங்கள் செயற்பாட்டு முறை இன்று உலகில் பல நாடுகளில் நடைமுறையில் உள்ளன. தபால் சேவையை அந்த விதத்தில் மேற்கொள்வதற்கான ஆலோசனையே இப்போது முன்வைக்கப்பட்டுள்ளது. இப்போது எயார் லங்கா, ஸ்ரீலங்கா ரெலிகொம், மற்றும் மத்திய போக்குவரத்துச் சபை ஆகியவை இவ்வாறு அரசும், தனியார் துறையும் இணைந்த நிர்வாக முறையிலேயே செயற்படுத்தப்படுகின்றன. அன்மையில் ஸ்ரீலங்காவில் புகையிரத சேவையைக்கூட இந்த வகையில் மாற்றியமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டது. இன்று இவ்வகையான அரசும், தனியார் துறையும் இணைந்து சேவைகளை வெற்றிகரமாக நிர்வகிக்கும் நாடுகளில் இந்தியா பிரதான இடம் வகிக்கிறது.

நியூசிலாந்து தபால் நிறுவனத்தின் தலைவர் ஜிம்போல்யர் தபால் திணைக்களத்தை மீளமைப்புச் செய்வதற்கான தன் ஆரம்ப ஆலோசனைகளைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் "பாரக்" நிறுவனத்திடமும் கையளித்துள்ளார்.

அதேபோன்று இவ்விரிவான ஆலோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் இங்கு நவீன நிறுவனம் நிறுவப்பட வேண்டுமாயின் அதற்காக நியூசிலாந்து தபால் நிறுவனத்துக்கு பல கோடி ரூபா பணம் செலுத்தப்படவேண்டியிருக்குமென அந்த ஆரம்ப அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ் அறிக்கை அரசினால் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என அரசு இதுவரை பகிரங்கப்படுத்தாத போதும் தபால் சேவையை மீளமைப்புச் செய்யும் வகையில் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை மிகுந்த பயனளிக்கும் அவதானிப்பு அறிக்கையாகுமெனத் தெரிய வருகிறது.

இதன்படி எதிர்காலத்தில் அமைச்சரவை இது பற்றி முடிவு மேற்கொண்ட பின்னர் எமது தபாற் திணைக்களத்தை மீளமைப்புச் செய்யும் பொறுப்பு நியூசிலாந்து தபால் நிறுவனமும் அரசும் இணைந்த செயற்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட இடமுண்டு என அரசத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ✦

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அல்சேசன் நாயும், பூச்சி நீக்கிய நாய்க்குட்டிகளும், பசுமாடும், ஒரு மாத பசுக்கன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.புஸ்பவதி, 678/2, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P. 222 5128.(11334)

Sony T.V. 14" விற்பனைக்குண்டு. தொடர்பு: S.நிஷாந்தன், 18/5, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.(11384)

நல்ல நிலையிலுள்ள CHALY மோட்டார் சயிக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.V.கந்தசாமி, இல.70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (11369)

## வீடு விற்பனைக்கு

கந்தர்மடச் சந்தியை அண்டிய பகுதியில் இரண்டு கடையுடன் சேர்ந்த வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.204, அரசடி வீதி, கந்தர்மடம். (11378)

யாழ்ப்பாணம், 5ஆம் குறுக்கு வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளிற்கு (நேரில்) இல.392, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P.222-2591 (11365)

பருத்தித்துறை, வியாபாரி மூலையில் சகல வசதிகளுமுள்ள இடத்தில் அமைந்துள்ள 4 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.யோகராசா, கந்தசாமி கோயிலடி, நீர்வேலி. (11341)

## கடைகள் வாடகைக்கு

இல.2, புதிய வீடமைப்புத் திட்டம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் சகல வசதிகளுடனும் கூடிய இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: V.M. ஜெறாட் பீற்றர்சன், இல.38, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.(11370)

## தவறிவிட்டது

கொடிகாமம், எருவனைச் சேர்ந்த சுப்பையா சரஸ்வதிப்பிள்ளை என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.518153714V), விசேட அடையாள அட்டை (இல.091042968) என்பன 27-11-2002 புதன்கிழமை யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி-25229)

## வீடு தேவை

யாழ்ப்பாண நகரப்பகுதியில் தண்ணீர், மின்சாரம் மற்றும் வசதிகளுடன் வாடகைக்கு வீடு தேவை. தொடர்பு: விளம்பர இல.1713, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (11383)

## ஆங்கில வகுப்புகள்

தரம் 6 முதல் O/L வரையிலான ஆங்கில இலக்கண, இலக்கிய வகுப்புகளும் A/L இற்கான பொது ஆங்கில வகுப்பும் 05.12.2002 இல் ஆரம்பமாகின்றன. தொடர்பு: கோ.சுப்பிரமணியம், இல.62, பழம் றோட், கந்தர்மடம். (11259)

## வகுப்புகள்

G.C.E. (O/L) 2003/2004 மாணவர்களுக்கான மாலை வகுப்புகள் ஆரம்பம். ஆங்கிலம் உட்பட முக்கிய பாடங்கள். தொடர்பு: விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (11309)

## சித்துப்பாத்தி மயானம் பயன்பாட்டுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.5

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானம் மீண்டும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக இந்த மயானம் பயன்பாடின்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-12)

## வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம் 10, 11

ஆரம்பம் : 06.12.2002

வெள்ளி 3.00 p.m.

**E.ஜீவா**

(11350)

*NEW SCIENCE HALL*

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## ஆண் மகனுக்கு சிறுநீரகம் தேவை

"B" (POSITIVE) பொசிட்டிவ் இரத்தப் பிரிவு உடைய சிறுநீரகம் தேவை. தந்து உதவக் கூடியவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

*விவரங்களுக்கு:* திரு.க. இரட்ணலிங்கம்
250, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

(11380)

## Digital Satellite Television System

செய்மதி தொலைக்காட்சித் துறையில் 16 வருட அனுபவமுள்ள **Sats - Tech India** நிறுவனத்தின் இணை



நிறுவனமான **Sats - Tech Engineers** நிறுவனம் மகிழ்ச்சிகரமான 2002ஆம் ஆண்டின் இறுதி விலைக் கழிவுடன் 12 தமிழ் சானல் உட்பட 250 இற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கக் கூடிய டிஜிரல் செய்மதி அன்ரனா சிஸ்டங்களை விசேட சலுகை அடிப்படையில் விற்பனை செய்கின்றது.

விசேட சலுகைகள்.....

- மிகக் குறைந்த விலை
- விற்பனைக்குப் பிந்திய சேவை
- ஒரு வருட உத்தரவாதம்
- இலவச ஒருவருட பராமரிப்பு
- இலவச இணைப்பு கூலி
- இலவச தொழில்நுட்ப ஆலோசனைகள்
- இலவச Channel Up dating

"Sats - Tech is The Trusted name in this field"
"Quality & Relaiablity is our Motto"

*Further details:*

***SATS - TECH ENGINEERS***

M/s National Video Center
182, K.K.S. Road (Near Kulapitty Church)
Kokkuvil.
Phone: 077 7710785

(11385)

## பதவி வெற்றிடம்

## ஒப்புநோக்குநர், வரவேற்பாளர்

## Proof Reader, & Receptionist

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான கணனி அச்சக தனியார் நிறுவனத்திற்கு மேற்குறிப்பிட்ட பதவிகள் வெற்றிடமாக உள்ளன. கீழ்க் குறிப்பிட்ட தகமையுடைய ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

- தமிழில் நன்கு தேர்ச்சி பெற்ற அறிவு
  (ஆங்கில அறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
- முன் அனுபவம் விரும்பத்தக்கது
  (ஆனால் கட்டாயமில்லை)
- வயதெல்லை 18 தொடக்கம் 30 வரை

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

*சுய விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்*

விண்ணப்ப முடிவுத்திகதி : 10.12.2002

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி*

விளம்பர இலக்கம்: 1711
'உதயன்' மேற்பார்த்து
இல: 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆனந்தமே உங்கள் மூலம்



உண்மையில் உங்களிடம் கவலைகளோ, இடைஞ்சல்களோ இல்லை. ஆனந்தம் ஒன்றே இருக்கின்றது. ஆனந்தத்தை எவ்வாறு அறிந்து உணர்வீர்? அதற்கு நீங்கள் அன்பின் வழியைப் பின்பற்ற வேண்டும். உணவுப் பண்டங்களின் பெயரைக் கூறுவதன்மூலம் உங்களது பசி அடங்காது. உங்களது கைகள், வாய் இவற்றைக் கொண்டு உங்களது வயிற்றை நிரப்பவேண்டும். அதுபோல நீங்கள் இனிய சொற்களைக் கூறி, புனிதச் செயல்கள் புரியவேண்டும். இவற்றின்மூலம் வாழ்க்கையின் இனிமையை நீங்கள் அனுபவித்து, ஆனந்தம் நிறைந்திருப்பீர்கள்.

### சாயி சிந்தனை

அனைவருமே அமரத்துவத்தின் குழந்தைகள். நீங்கள் அனைவரும் ஆனந்தத்தின் வடிவங்கள். மனிதன் "ஆனந்த பிப்பாஸி" (ஆனந்தத்தைத் தேடுபவன்) என்று கூறப்படுகின்றான். அவன் ஆனந்தத்திலிருந்து வெளிவந்ததால், தனது மூலத்துக்கே அவன் செல்ல விரும்புகிறான். நீரில் பிறந்த மீன் எவ்வாறு நீருக்குள் செல்ல விரும்புகிறதோ அதுபோல ஆனந்தத்தில் பிறந்த மனிதன் எங்கிருந்தாலும் என்ன செய்தாலும் ஆனந்தம் வேண்டுமென்று தீராத வேட்கை கொள்கிறான். அவன் மூலத்திற்குச் செல்லும் வரையில் அவனுக்கு அமைதி என்பதே இல்லை. இவ்வுலகில் ஆனந்தம் கிட்டாததால் மனிதன் எப்போதும் அமைதியற்று இருக்கின்றான். ஆகவேதான் கீதை ("அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்") என்று கூறுகிறது. இவ்வுலகம் தற்காலிகமானது. இங்கு மகிழ்ச்சி இல்லை. உங்களது அன்றாடச் செயல்களில் நீங்கள் ஈடுபடலாம். உங்களது தொழிலையோ வேலைப்பணிகளையோ கைவிட வேண்டிய அவசியமில்லை. ஆனால், உங்கள் மனதை கடவுளிடம் நிறுத்தி வைத்திருங்கள். அப்போதுதான் உங்கள் அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். தெய்வீக ஆனந்தத்தை ஒரு முறை நீங்கள் அனுபவித்தால் போதும். உங்கள் மனம் உலக இன்பங்களை நோக்கிச் சிறிதும் திரும்பாது. உங்களுக்குள்ளேயே இருக்கின்ற இந்த ஆனந்தத்தை நீங்கள் அறிந்து உணர முயற்சி செய்யுங்கள்.

ஆனந்தமே உங்களது மூலம். ஆனந்தமே உங்களது மூச்சு. ஆனந்தமே உங்களது பிராணன்.

*(ஆதாரம்: பிரசாந்தியில் பூத்த புதிய மலர்கள்)*

## காப்புறுதிப் பயிற்சி – 2002

பிரதமவிருந்தினர்: **திருமிகு.R.T.விக்னராசா**
*(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)*

சிறப்புவிருந்தினர்: **திருமதி R.F.அரியநாயகம்**
*(பிராந்திய முகாமையாளர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)*

நாள் : இன்று (5.12.2002) வியாழக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
இடம் : பஸ்ரியான் ஹோட்டல், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

எமது அமைப்பின் (642) கீழ்வரும் முகவர்களும் அழைக்கப்பட்டவர்களும் உரியநேரத்திற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

லயன் சி.ந.கதிர்வேலு J.P.
*அமைப்பாளர்,*
*இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.*

*"நயினைக்கதிர்"*
*தேணாவளவு,*
*கரவெட்டி மேற்கு.*

(11382)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 05 - 1934



மறைவு 16 - 11 - 2001

கருகம்பனை

**சுப்பிரமணியம் குமரேசபிள்ளை (குஞ்சி)**

திதி :- 05-12-2002

*எங்கள் குடும்பத்தின் இணையில் பெருந்தலைவா*
*உங்கள் பிரிவால் உளமுருகி வாடுகிறோம்*
*எல்லா வேளையும் நினைத்து என்றென்றும் அஞ்சலிப்போம்!*

*முத்துக்கிருஷ்ணர் வீதி,*
*சுன்னாகம்.*

(11348)

சகோதரன்,
பெறாமக்கள்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா சாந்தலிங்கம்

(உரிமையாளர், ஸ்ரீபத்மா றேடர்ஸ் - கிளிநொச்சி)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சாந்தலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (03.12.2002) செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் கருணாவின் அன்புக் கணவரும் மதன், குகன், கிருபன், சாந்தினி, தர்சினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.12.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிளிநொச்சி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ச.வன்னியசிங்கம்
(பெறாமகன்)

*சரவணை கிழக்கு,*
*வேலணை.*

(11371)

# குழந்தையுடன் கலரிக்கு வந்த தமிழ் எம்.பியின் திகில் அனுபவம்!

நேற்றுமுன்தினம் காலையில் நாடாளுமன்றம் கூடியபோது, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, சபை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கினார். ஒருவாரமாக சுகவீனம் காரணமாக தனியார் வைத்தியசாலையில் இருந்த அவர், சுகம்பெற்று வந்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகும்போது, சபை ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அதனுடன் தொடர்புடைய அமைச்சர்கள் பதிலளித்தல் முதற்பணியாக இடம்பெற்றது.

சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்தவுடனேயே அரச தரப்புப் பிரதம கொறடாவும், தொழில் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க, சபாநாயகர் உடல்நலம் பெற்றுத் திரும்பியமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தார். அதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் மேசைகளில் தட்டி மகிழ்ச்சி தெரிவித்து வரவேற்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி எம்பி.ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, உள்துறை அமைச்சரிடம் கேட்டிருந்த வினாவை எழுப்பிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சபாநாயகர் உடல்நலம் பெற்றுத் திரும்பியமைக்கு மகிழ்ச்சி தெரிவிப்பதாகக் கூறினார். பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் காமினி விஜயமுனி சொய்ஸாவும் அதனை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்தார். பலரும் தமது உடல்நலம் பற்றி மகிழ்ச்சி தெரிவித்தமைக்கு சபாநாயகர் நன்றிகூறி தலைமைப் பீடத்தை விட்டகன்றார்.

கேள்வி நேரத்தின் பின்னர், சபை நடவடிக்கைகளுக்கு குழுக்களின் பிரதித் தலைவர் ஸ்ரீ அந்ரா ஹெனனதி தலைமை வகித்தார். நேற்றுமுன்தினம் காலை பத்து மணியளவிலிருந்து மாலை ஆறரை மணிவரை நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது, காலையில் 10.15 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை கடற்றொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது.

தலைமைத்துவ சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கடற்றொழில் பிரதி அமைச்சருமான எம்.அப்துல் காதர் விவாதம் ஆரம்பமாகி இரு மணித்தியாலங்களுக்குப் பின்னரே சபைக்கு வருகை தந்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போதைக்கு பிளவுபட்டிருந்தாலும்கூட, நாம் அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவினை வழங்குவோம். தமிழ் செய்திப் பத்திரிகை ஒன்றில் தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் "அரசுக்கு ஆதரவு வழங்குவோம்" எனக் கூறியுள்ளனர். அந்த அவசியம் எழாது என அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இவரது உரையினை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

கடந்த வாரம் சபைக்குள் கொண்டுவரப்பட்ட குழந்தைகளுக்கு பாலூட்டும் புட்டிகளினால் ஏற்பட்ட பரபரப்பின் தாக்கம் நேற்றுமுன்தினம் காணப்பட்டது.

தமிழர் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம் பகல் உணவு இடைவேளைக்குப் பின்னர் சபை அமர்வினைப் பார்ப்பதற்கென அவரது மருமகளையும் சிறு குழந்தை ஒன்றையும் பொதுமக்கள் கலரிக்கு அழைத்துவந்தார்.

கடமையில் இருந்த பொலீஸார் "குழந்தையை கலரிக்குக் கொண்டு செல்ல முடியாது" எனக் கூறினர். "ஏன் இவ்வாறு கூறுகிறீர்கள்?" என எம்.பி.கேள்வி எழுப்பினார்.

கடந்த வாரம் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரின் மேசையில் கொண்டு வந்து வைக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பாலூட்டும் புட்டி பற்றிய காரணத்தை விளக்கிய பொலீஸார், அன்று முதல் குழந்தைகளை பார்வையாளர் கலரிக்குக் கொண்டுசெல்ல அனுமதிக்கக்கூடாது என்பது நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகத்தின் பணிப்புரை எனக் கூறினர்.

பார்வையாளர் கலரிக்கு பிரவேசிக்கும் கதவருகே மும்மொழிகளிலும் எழுதி ஒட்டப்பட்டிருந்த அறிவித்தலையும் அவர்கள் துரைரெட்ணசிங்கம் எம்.பிக்குக் காட்டினர். (ஒ)

# குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவதே அரசின் நோக்கம்!

## அமைச்சர் கரு ஜயசூரிய கூறுகிறார்

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இருள் சூழ்ந்த ஒரு மின்சார சபையின் பொறுப்பினையே அமைச்சு ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. அந்தநிலையைப் படிப்படியாக மாற்றி, தற்பொழுது நாடு முழுவதும் தடையின்றி மின்சாரத்தை வழங்கக்கூடிய நிலை உருவாகியுள்ளது. மின்சாரசபை உத்தியோகத்தர்களின் திட்டமிடப்பட்ட கடின உழைப்பே இதற்கான காரணமாகும்.

- இவ்வாறு மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சருக்கான குழுநிலை விவாதத்தில் அமைச்சர் கரு ஜயசூரிய கூறினார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது:-

இந்த வருட இறுதிக்குள் 300 மெகா வோட்ஸ் மின்சாரத்தை மேலதிகமாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 50 மெகா வோட்ஸ் அனல் மின்சாரம் அடுத்த வருடத்தில் பெற்றுக்கொள்ளப்படும். குறைந்த விலைக்கு மின் சாரத்தைக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

மேல் கொத்மலை மின்னுற்பத்தித் திட்டம் ஐந்து வருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும். கெரவலபிட்டியில் உருவாக்கப்படவுள்ள அனல் மின்சாரத் திட்டத்தையும் ஐந்து வருடங்களில் செய்து முடிப்போம். வறிய மக்களுக்கு குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவது அரசின் நோக்கமாகும்.

மின்சாரசபை 17 ஆயிரத்து ஐந்நூறு மில்லியன் ரூபாவை வங்கியிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 21 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா கடனாளியாக உள்ளது. இந்தக் கடன் சுமைகளைக் குறைக்கும் நடவடிக்கை எடுக்கப்படும். தற்பொழுது பாவனையாளர்களின் வாகனங்களின் நலன் கருதி ஈயக கலவையற்ற பெற்றோல் வழங்கப்படுகிறது.

பெற்றோலின் ஏகபோக உரிமையைக் கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை. அது மற்றைய நிறுவனங்களுடன் போட்டி போட்டுச் செயற்படவேண்டும். - இவ்வாறு அமைச்சர் கூறினார். (ஒ)

# இந்து சமுத்திரத்தில் இலங்கை மீன்பிடி கேந்திரம் ஆக்கப்படும்

## அமைச்சர் மஹிந்த விஜேசேகர தெரிவிப்பு

யாழ்ப்பாணம் பகுதியில் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகப் பெருந்தொகைப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதிக்கு மீன்பிடிக் கப்பல் மற்றும் மீனவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்படும். அதேபோல மன்னார், கிளிநொச்சி, அம்பாறை மாவட்டங்களுக்கும் இந்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று கடற்றொழில், சமுத்திர வளங்கள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேற்படி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கொள்கை விளக்க உரையை நிகழ்த்தும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் மஹிந்த விஜேசேகர தொடர்ந்து கூறியதாவது:-

மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பான கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. அதில் நீண்ட, குறுகியகால இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் கைத்தொழில் நவீனமயப்படுத்தப்படவேண்டும்.

அதற்கேற்ப உலக சந்தையில் எமது மீன்பிடிக் கைத்தொழிலுக்கு ஓர் இடம் பெற்றுக்கொடுக்கப்படும்.

வெளியிடங்களுக்குக் கடலுணவுகளை அனுப்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. வாடிக்கையாளர்களுக்குத் தரமான நல்ல மீன் நியாய விலைக்குக் கொடுக்கப்படும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடற்றொழில் சமுத்திர, வளங்கள் நிர்வாகம் தனியார் மயமாக்கப்படமாட்டாது.

எமது அமைச்சில் குறைபாடுகள் இருக்கலாம். அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த அமைச்சின் இலட்சியங்கள் ஐந்து. அவையாவன:-

★ தேசிய வருமானத்தில் கடற்றொழிலின் வருமானத்தை அதிகரிக்கச் செய்தல்.

★ மக்களின் மீன் பாவனையை அதிகரித்தல்.

★ கடற்றொழிலாளர்களின் சமூக அந்தஸ்தை உயர்த்துதல்.

★ கடற்றொழில் துறையில் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்தல்.

★ மீனவர்கள்மூலம் கடல் வளத்தைப் பாதுகாத்தல்.

இந்த இலட்சியங்களினூடாக 2008 ஆண்டில் இந்து சமுத்திரத்தில் மீன்பிடிக் கேந்திரநிலையமாக இலங்கை மாற்றப்படும் - என்றார். (ஒ)




# வடபகுதி மீனவர்களுக்கு நஷ்டஈடு, மீள்குடியமர்வு வசதி

## அமைச்சர் ஜயலத் வாக்குறுதி

வடக்கில் மீனவர்களுக்கான மீனபிடிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மீன்பிடிக்கான நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, வடக்கிலிருந்து இடமபெயர்ந்த மீனவர்கள், மீள்குடியமரவும் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன நேற்றுமுன்தினம் சபையில் உறுதியளித்தார்.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:- வடபகுதி மீனவர்களுக்கு மேலும பல வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டியுள்ளது. மீனைப் பாதுகாக்கக் கூடிய குளிர் அறை, மீன்பிடிப படகுகள் எனப் பல தேவைகள் அவர்களுக்கு உள்ளன.

அவர்கள் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளும செய்து கொடுக்கப்படவேண்டும்.

அவர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டிய தேவையும் உள்ளது.

மீனவர்கள் கூட்டுறவு இயக்க அபிவிருத்தி, அந்த சமூகப் பெண்களின் கல்வி, சமூக அந்தஸ்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியிருக்கிறது. - இப்படி அவர் கூறினார். (ஒ)

# மு. காங்கிரஸ் தொடர்ந்து அரசையே ஆதரிக்கும்

## மொஹிதீன் அப்துல்காதர் உறுதி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆதரவை, தொடர்ந்து அரசிற்கு வழங்கும். கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும் அதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை அரசு இழக்கும் எனவும் சிலர் கருதுகின்றார்கள். இது தேவையற்றது என்று கடற்றொழில் சமுத்திர வளங்கள் பிரதி அமைச்சர் மொஹிதீன் அப்துல்காதர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

மேற்படி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பிரதி அமைச்சர் அப்துல்காதர் தொடர்ந்து கூறியதாவது:-

இன்று நாட்டில் அமைதி நிலவுகின்றது. ஆனால், சில சக்திகளின் தூண்டுதலில் அசம்பாவிதங்கள் நடக்கின்றன. இதனால், அமைதி குறித்து மக்களிடையே சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் வாழைச்சேனையைச சேர்ந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவ்வாறான சம்பவங்கள் குறித்து வடக்கு-கிழக்கு தமிழ் எம்பிக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய வெளிநாட்டு நிதியுதவியுடன் திட்டங்கள் வகுக்கப்படவுள்ளன. திருகோணமலை, வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படும். இந்திய மீனவர்கள் மன்னார் கடற்பகுதிக்குள் வந்து மீன் பிடிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. இது கடந்த இருபது வருடங்களாக நடந்து வருகின்றது. எனவே, உடனடியாக அதை நிறுத்தி விடமுடியாது என்றார். (ஒ)

# மின்சக்தி அமைச்சருக்கு ஆனந்தசங்கரி புகழாரம்

மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் அடக்கமாக, மிகவும் பொறுப்புடன் பணிகளை செய்கிறார். இவரது சேவைமனப்பான்மை மற்றைய அமைச்சர்களுக்கு ஒரு முன் உதாரணமாகும்.

- இவ்வாறு தமிழர் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான வீ.ஆனந்தசங்கரி கூறினார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் - வடபகுதியில் மின்சார இணைப்பினைப் பெறுவதற்கு மேலதிகமாகப் பணம் செலுத்தவேண்டியுள்ளது. அது தடுக்கப்படவேண்டும்.

புகரி, நாச்சிக்குடா போன்ற பகுதிகளில் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. வன்னிப் பகுதிகளில் பல கிராமங்கள் மின்சாரமின்றி இருளில் மூழ்கியுள்ளன என்றும் கூறினார். (ஒ)

# வடக்கில் 10 சதவீதமானோருக்கே ஒழுங்காக மின்சாரம் கிடைக்கிறது!

## தி.மகேஸ்வரன் உரை

வடபகுதியில் 20 சதவீதமானவர்களுக்கே மின்சார விநியோகம் கிடைகதுள்ளது. அதிலும் 10 சதவீதமானவர்களுக்கே ஒழுங்காக மின்சாரம் கிட்டுகிறது.

யுத்தநிலைக்கு முன்னர் இருந்ததைப் போன்று யாழ்.பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவேணடும்.

எமது பகுதியில் வாழும் 3ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த அமைச்சர் கரு ஜெயசூரியவை பாராட்டுகிறேன்.

- இவ்வாறு இந்து பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது மக்கள் யுத்த நிலையினால் பல ஆண்டுகளாக மின்சார வசதிகளின்றி அவதியுற்றனர்.

மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. ஏற்கனவே மின்சார இணைப்புக்குப் பணம் செலுத்தியவர்களை, மீண்டும் இணைப்பினைப் பெறுவதற்கு பணம் செலுத்துமாறு கேட்பது நியாயமற்றதாகும்.

அரசு சமாதானப் பேச்சுக்களை வெற்றிகரமாக முன்கொண்டு செல்கின்றது. அரசைப் பதவியிறக்கி, தாம அதிகாரத்துக்கு வரலாமென பொதுஜன ஐக்கிய முன்னணி முயற்சிகளை மேற்கொள்கிறது. அதற்கு ஜே.வி.பியினரும் துணைசெய்கினறனர்.

இனவாதத்தை முன்னிறுத்தி செயற்படுகின்றனர். சமாதானத்துக்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவேயாகும். தமிழ் மக்களின் உரிமைகளைப்பறிக்கும் விதத்தில் செயற்பட்டு, ஜே.வி.பியினர் நாடு இரண்டாகப் பிளவுபடுவதற்கு அடிகோல முயலக்கூடாது.

- இப்படி அமைச்சர் தெரிவித்தார். (ஒ)

நெல்லியடியில்

# சொலெக்ஸ் மூக்குக்கண்ணாடியகம்

ஆம்! பிரதி செவ்வாய், வெள்ளி தோறும் நெல்லியடியில்
தமது சேவையினை ஆரம்பித்துள்ளனர்
சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகத்தினர்

★ இலவச கண் பரிசோதனையுடன் கண்ணாடியினை பெற்றுக்கொள்ளவும், சன்கிளாஸ் - மாபிள்கண் வகைகளுக்கும், சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்

## சொலெக்ஸ் ஒப்ரிக்கல்

பிரதான வீதி, 1ஆம் குறுக்குத் தெரு, (வண்ணமாட லேன்) நெல்லியடி.
232/A, கண்டி வீதி, சாவகச்சேரி.
(C/25256)


# 5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்

**கதிர்காமத்தம்பி சிவநாதன்**

*(உரிமையாளர், ராணி பேக்கரி, ஓராம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை)*

தோற்றம் 09.12.1944 மறைவு 01.12.1997

திதி: 05.12.2002

ஆண்டு ஐந்து சென்றதுதான்
ஆறவில்லை உம்துயரம் - ஆனாலும்
உம் நினைவு தரும் ஆத்மசுகத்தில்
ஆறுகின்றோம், வாழ்கின்றோம் அப்பாவே!

*தேவரான், புலோலி தெற்கு, புலோலி.* (C/25246)

நினைவகலா
மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகலட்சுமி இராசரத்தினம்

(முன்னாள் அதிபர், இராமநாதன் கல்லூரி)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர், உரும்பிராய் திருமதி யோகலட்சுமி இராசரத்தினம் அவர்கள் நேற்று (04.12.2002) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அ.இளையதம்பி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசரத்தினம் அவர்களின் பிரியபத்தினியும் சித்தாத்தர், பகீரதன், பரந்தாமன், அரவிந்தன், காலஞ்சென்ற நக்கீரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உறவினர்களையும் நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

001 416 - 2674224
Raj - Aravinthan
2758 - Egelinton Grenue East
unit 73
Scarborugh M - 1J3P3
Ontario, Canada.

தகவல்:
திரு.திருமதி இ.பகீரதன(மகன்)
*உடையார் வளவு,*
*கற்பக விநாயகர் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (11412)

## சூசை செபமலை

இளவாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசை செபமாலை நேற்று (04-12-2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பீற்றர் பியன்வெனு (ஆசிரியர், இளவாலை கன்னியர்மட மவி.), நிர்மலா, ஜெயமாலா, வசந்தம், பீற்றர் ஜஸ்ரின் (கொள்வனவு முகாமையாளர், அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்), ஜொபித்தா, உதயன் (டோகா), ஜயந்தன் ஆகியோரின் தந்தையும் மரியகொறற்றி (அதிபர், பெரியவிளான் றோ.க.த.பாடசாலை), பெனடிக்ற் இம்மானுவேல், எட்வேட், யூட்சி (ஆசிரியர், இராமநாதபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் றோய், ஜோய், வோல்டன், செலின்ரன், ரொசின்ரன், மடுஷனா, ஜெனோஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05-12-2002) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புனிதயூதாததேவு ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக புனித யூதாதேவு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இளவாலை மேற்கு,*
*இளவாலை.* (C-25257)

தகவல்
செ.பீ.பியன்வெனு (மகன்)

## கந்தசாமி இராஜரட்ணம் (சின்னத்தம்பி)

**பத்தர்**

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராஜரட்ணம் நேற்று (4.12.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அப்புத்துரை - பூமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் லோகேஸ்வரியின் (பவானி) அன்புக் கணவரும் சசிக்குமார் (யாழ்.செயலகம், DRC.C எழுதுவினைஞர்), ராஜ்குமார் (யாழ். பல்கலைக்கழகம் வணிகத்துறை இறுதியாண்டு மாணவன்), ஜெயப்பிரியா, இராம்குமார், ரமேஸ்குமார் (யாழ். மத்திய கல்லூரி A/L 2003 கலைப் பிரிவு மாணவன்), வசந்தப்பிரியா (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் A/L 2004 கலைப்பிரிவு மாணவி), செல்வப்பிரியா (யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் தரம் 9 மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கமலர், இராசமலர், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் (பாலு), சண்முகராசா, சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராசதுரை (மாஸ்ரர்), இராஜேஸ்வரி (யோகம்), சித்தா, சொக்கலிங்கம், காலஞ்சென்ற பாஸ்கரதாஸ், தங்கராஜா, இராஜேஸ்வரி (சிங்கப்பூர்), பாலசுந்தரம் (ஜயாமணி), சத்தியபாமா, புவனேஸ்வரி (பிரான்ஸ்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.12.2002) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்படையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*84/3, தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (11409)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

# பிரதேச செயலருக்கு இன்று கருத்தரங்கு

யாழ்.மாவட்ட சகல பிரதேச செயலர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலர்களுக்கான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

மாவட்ட நிர்வாகம் தொடர்பான முக்கிய விடயங்கள் இக்கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

# கட்டடப் பணி தரமற்றதென முறைப்பாடு

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் கட்டப்பட்டு வரும் தாதிகள் விடுதியின் கட்டுமானப் பணிகள் தரமற்றவையெனத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் வடக்கு - கிழக்கு மாகாண பிரதி சுகாதாரசேவைகள் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் மாகாண கட்டடத் திணைக்களம் பொறியியலாளரைக்கேட்டுள்ளார்.

இவ்வைத்தியசாலையில் 12 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் தாதிகள் விடுதியின் கட்டட நிர்மாண வேலைகள் தரமற்றவை என மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் பிரதி சுகாதாரப் பணிப்பாளருக்கு முறையிட்டிருந்தார். (ஓ-173)


நல்லூர்

## சயன்ஸ் அக்கடமி

கல்வி, ஒழுங்கு, கட்டுப்பாடுகளுக்கு தனித்துவமான ஒரே ஒரு நிறுவனம் (25) வருட கண்ணியமான சேவையில்
தரம்: 4 முதல் O/L வரை
வகுப்புகள் இன்றுகாலை
9 மணிக்கு ஆரம்பம்.
இன்றுமுதல் பிரிவு (2) இற்கு
அனுமதி வழங்கப்படும்.
பிரிவு (1) Full (11406)

*எல்லா வகுப்புகளுக்கும் விஷேட*
**சிங்களம்**
*யாழ். நகரில் மீண்டும்*
**ஈ.எஸ்.பியதாஸ**


# வேலணை பிரதேச சபை
## ஒப்பந்தகாரருக்கான அறிவித்தல்

எமது சபையில் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகளுக்காக எமது சபையுடன் ஒப்பந்தம் செய்த ஒப்பந்தகாரர் கவனத்தில் கொள்ளவும்.

| இல. | வேலை விவரம் | ஒப்பந்த முதிர்வு காலம் |
|---|---|---|
| 01 | புங்குடுதீவு, சங்கத்தானை கேணி வீதி | 15.11.2002 |
| 02 | நயினாதீவு, வேலணை பிரதேச சபைக் கடைத் தொகுதி | 15.11.2002 |
| 03 | நாவலர் சனசமூகநிலைய பாலர்பாடசாலை பகுதி வேலை | 15.12.2002 |
| 04 | அம்பிகை நகர் மீன்சந்தை | 15.12.2002 |
| 05 | தாய், சேய் நலனபுரி நிலையம் புனரமைத்தல் | 15.12.2002 |
| 06 | சாட்டி மயானம் புனரமைத்தல் | 15.12.2002 |
| 07 | மதியொளி பாலர்பாடசாலை தளபாடம் வழங்கல் | 28.11.2002 |
| 08 | அல்லைப்பிட்டி மத்தி பாலர் பாடசாலை | 28.11.2002 |
| 09 | ஊரதீவு பாலர்பாடசாலை கட்டடத்திருத்தம் | 15.12.2002 |

மேற்படி வேலைகளை 15.12.2002 ஆம் திகதிக்கு முன்னர் திருப்திகரமாக முடித்து அதற்கான கொடுப்பனவுச் சீட்டினை எமது சபைக்கு சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

திரு.செல்லப்பா சண்முகராஜா
செயலாளர்
வேலணை பிரதேச சபை

(C/25250)

திரு.ந.கருணாகரகுருமூர்த்தி
தலைவர்
வேலணை பிரதேச சபை

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
# கேள்வி அறிவித்தல்

எமது வலிகாமம் வடிசாலைப் பொறித் தொகுதியின் கொதிகலன் புதிதாகச் செய்வதற்கும், உதிரிப்பாகங்கள் மாற்றம் செய்வதற்கும் முழுமையான சேவிஸ் செய்வதற்கும் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகிறது.

கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் ரூபா 250/-கேள்விப்படிவப் பணமாகச் செலுத்திக் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி
06.12.2002 - 10.12.2002 வரை.

கேள்விப் பத்திரம் ஏற்கப்படும் திகதி
12.12.2002 முற்பகல் 10.00 மணி வரை.

கேள்விப் பத்திரம் திறத்தல்
12.12.2002 முற்பகல் 11.30 மணி.

தலைவர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.

(C-25255)


# வெற்றிடம்

## மருத்துவப் பிரதிநிதி
(Medical Delegate)

நெஸ்லே, இன்றைய உலகின் முதற்தர உணவு உற்பத்தி நிறுவனமாகும். ஏறத்தாழ உலகில் அனைத்து நாடுகளிலுமுள்ள அதன் 450 உற்பத்தி ஆலைகளில் 300,000 க்கும் அதிகமானோர் தொழில் புரிகின்றனர்.

நெஸ்லேயின் போஷாக்கு உற்பத்திகளை, வட பிராந்தியத்தில் சுகாதாரத் தொழில் துறை சார்ந்தோருக்கு அறிமுகம் செய்யவும், ஊக்குவிக்கவும், கடின உழைப்பு மற்றும் நம்பகத்தன்மையோடு நல்லொழுக்கமும் திறனும் கொண்ட ஒருவரை எம்முடன் இணைத்துக் கொள்ள விரும்புகிறோம்.

விண்ணப்பதாரி **யாழ்ப்பாணத்தில் வசிப்பதோடு** 21- 30 வயதிற்கு உட்பட்டவராகவும், க.பொ.த உயர் தரத்தில் இரசாயனவியல் உட்பட விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும். விஞ்ஞானப் பட்டதாரியாக இருந்தால் அல்லது சுகாதார நலத்துறையில் (மருந்தாக்கல் துறை / மருத்துவத் துறை) அனுபவம் இருந்தால் அனுகூலமாகக் கருதப்படும்.

விண்ணப்பிப்பவர்கள் சுய ஊக்கமுடையவர்களாகவும் ஆங்கிலத்தைச் சரளமாகக் கையாளும் தன்மையுடன், தொடர்பாடல் ஆற்றல் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள், இரு நோக்கு வாகனங்களை ஓட்டும் திறனோடு, அதற்கான செல்லுபடியாகக் கூடிய அனுமதிப் பத்திரத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

எமது இந்த எதிர்பார்ப்புகளுக்கு அமைவானவர்களாக நீங்கள் இருந்தால், 2002 **டிசம்பர் 10 மற்றும் 11** ஆம் திகதிகளில் **மு.ப 8.30 தொடக்கம் பி.ப 1.30** வரை கீழுள்ள முகவரியில் நடைபெறும் **நேர்முகப் பரீட்சைக்கு நேரடியாகச் சமுகம்** அளிக்கவும்.

**பஸ்தியன் ஹொட்டேல்**
**இல: 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021-2222605 பக்ஸ்: 021-2223447**

உறவினரல்லாத இருவரை சிபார்சாளர்களாகக் குறிப்பிட்ட சுய விபரக் கோவை, அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் ஆவணங்களுடன் வருமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

மனித வள முகாமையாளர்
நெஸ்லே லங்கா லிமிட்டட், 440, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

Nestlé

Careers that brand you for life

# வலுவிழப்பு என்பது ஒரு குறையல்ல!

திருநெல்வேலியில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சர்வதேச ஊனமுற்றோர்தின விழாவில் சில காட்சிகள். *(படங்கள்:வசந்தன்)*




விழிப்புலன் இன்மை நடனமாடத் தடையில்லை



விழிப்புலனற்ற வாழ்வகச் சிறுவர்களின் கோலாட்டம்



செயற்கைக் காலுடன் கோலமயிலாட்டம்



விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

### மொத்தத் தொகையை பகிர்ந்து

## பூசகரும், நிர்வாகத்தினரும் மின்கட்டணம் கட்ட உத்தரவு

### மல்லாகம் நீதிமன்றம் பிறப்பித்தது

வலி.வடக்கு.டிசெ.5

இலங்கை மின்சாரசபைக்கு ஆலய மொன்றின் மின்கட்டணமாகச் செலுத்த வேண்டிய 28 ஆயிரம் ரூபாவை கோயில் பூசகரும், ஆலய நிர்வாகமும பங்கிட்டு கட்ட வேண்டும் என மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் கட்டளையிட்டுள்ளார்.

தனது வீட்டிற்கு மின்சாரம் பெற நடவடிக்கையெடுத்த போது ஆலய நிர்வாகத்தினர் மின்சாரம் பெறுவதற்கு நாட்டப்பட்ட தூண்களை சேதப் படுத்தியதாக புன்னாலைகட்டுவன் ஆயர்கடவை சித்தி விநாயகர் ஆலயப் பூசகர் சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இவ்விடயம் சம்பந்தமாக சுன்னாகம் பொலீஸார் ஆலய நிர்வாகிகள் மீது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்தனர்.

ஆலயத்தில் இருந்து பூசகர் முன்பு மின்சாரம் பெற்ற விடயத்தை நிர்வாகத்தினர் அப்போது நீதிமன்றத திடம் தெரிவித்தனர். அத்துடன் கடந்த ஒரு வருடமாக ஆலய மின்சாரக் கட்டணம் கட்டாமையால் ஆலய மின்சாரம் துண்டிக்கப்பட்டு உள்ளமையையும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்தனர்.

மேற்படி விடயங்களை கருத்தில் கொண்டு மின்கட்டணத்தில் ஆலய பூசகர் 18 ஆயிரம் ரூபாவும் ஆலய நிர்வாகம் 10 ஆயிரம் ரூபாவும் மின்சார சபைக்கு கட்ட வேண்டும் எனவும் -

ஆலயத்திற்கு தனியாகவும் பூசகர் தனது வீட்டுக்கு தனியாகவும் மின்மானிகளை பொருத்தி மின்சாரம் பெற வேண்டும் என்றும் -

நீதிவான் பணித்தார்.

இதேவேளை, குறிப்பிட்ட ஆலயத திற்கு நீதிபதி நேரில் சென்று பார்வையிடுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

(ஓ-86)



**ஐரோப்பிய நாடுகளில் ஒளிபரப்பாகி வரும் ரீ.ரீ.என் தொலைக்காட்சி நிறுவனம் 'உதயன்' தொடர்பான விவரணப் படம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இதற்காக அந்த நிறுவனத்தைச் சேர்ந்த சுவிஸ் நாட்டு பிரதிநிதி பிரபாகரன், தொழில்நுட்ப இயக்குநர் பாபு மற்றும் யாழ். நிகழ்ச்சி தயாரிப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் நேற்றுமுன்தினம் 'உதயன்' பணிமனைக்கு வந்திருந்தனர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.**

*(படம்: பத்மராஜ்)*

## வாந்திபேதி அறிகுறிகளுடன் மேலும் மூவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,டிசெ.5

யாழ்.குடாநாட்டுப் பகுதியில் பரவி வரும் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டவர்களென்ற சந்தேகத்தின் பேரில் ஏழாலை தெற்குப் பகுதியைச் சேர்ந்த மேலும் மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் தீவிரமாகப் பரவிவரும் ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த பெண் உட்பட மூவரே சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களுக்கான பூர்வாங்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை முன்பு சிகிச்சைக் குட்படுத்தப்பட்டவர்களுக்கு மேற்கொளப்பட்ட பரிசோதனைகளின்படி புன்னாலைக்கட்டுவன் மேற்கைச் சேர்ந்த (ஏழாலை தெற்கு) நபர் ஒருவருக்கு வாந்திபேதி நோய் பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் ஆபத்தான நிலையில் இருந்துவருவதாக அறியப்படுகிறது.

இவர்களுடன் மொத்தம் 7பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். தற்போது ஏழாலை தெற்கிலேயே இந்நோய் தீவிரமாகப் பரவ ஆரம்பித்துள்ளதாக வைத்தியசாலைப் பதிவேடுகளின்படி தெரியவருகிறது.

(ஓ-15)

### மண்டைதீவில் சுற்றிவளைக்கப்பட்ட

## இந்திய மீனவரையும், றோலரையும் கடற்படையினர் விடுவித்தனர்

### சமாசத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.5

மண்டைதீவுப் பகுதியில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய 'றோலர்' படகை மண்டைதீவுக் கடற்தொழிலாளர் கைப்பற்றிய போதிலும் அதனைக் கடற்படையினர் விடுவித்துவிட்டதாக வடமாகாணக் கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

5 விசைப்படகுகளில் மீன்பிடிப்பதற்காக மண்டைதீவுக் கடற்தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் கடலுக்குச் சென்றனர். அப்போது கரையை அண்டிய பகுதியில் இந்திய 'றோலர்' படகு ஒன்று மீன்பிடித்துக்கொண்ருந்தது. இதனை அவதானித்த மண்டைதீவு மீனவர்கள் இந்தியப் படகை சுற்றிவளைத்தனர். பின்னர் அதனைத் தமது விசைப்படகொன்றில் கட்டி, அதிலிருந்த 4 இந்திய மீனவர்களுடன் கரைக்குக் கொண்டு வந்தனர்.

விடயம் அறிந்து மண்டைதீவுக் கடற்தொழிலாளர் சங்கத்தினர் அங்கு சென்றனர். இந்திய மீனவர்களைப் பொலீஸில் ஒப்படைக்க அவர்கள் எண்ணினர்.

அந்தவேளையில், அங்கு வந்த கடற்படையினர் அவர்களை விடுவிக்குமாறு கூறினர். இதனால் இந்திய மீனவர்களுடன், றோலர் படகும் விடுவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 7மணியளவில் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் மீண்டும் அப்பகுதியில் மீன்பிடித்துவிட்டே சென்றனர். இது மண்டைதீவு மீனவர்கள் மத்தியில் கடும் விசனத்தினை ஏற்படுத்தியுள்ளது - என்றார் அவர். (ஓ-12)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 428 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 03.12.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 4605479-4619187 | |

வெற்றி இலக்கங்கள் 09 24 47 48

லக்கினம் கடகம்



ஜக்பொட் பரிசு ரூபா. 2,305,450/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 2,982,200/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 303,107 | 10 | 3,031,070 |
| 2 இலக்கங்கள் | 27,769 | 20 | 555,380 |
| 1 இல + லக்கினம் | 27,560 | 30 | 826,800 |
| 2 இல + லக்கினம் | 2,560 | 100 | 256,000 |
| 3 இலக்கங்கள் | 749 | 500 | 374,500 |
| 3 இல + லக்கினம் | 61 | 5,000 | 305,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,305,450 | - |
| மொத்தம் | 361,810 | - | 5,748,750 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,748,750/-

தொடர் இல. 5603577க்கு மேற்பட்ட சிகப்பு நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 06ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4615606-7-09
4612114-1-56
4606599-6-88
4608054-1-16
4607637-9-61

அபிவிருத்தி லொத்தர் வாக்குறுதிகளை நிறைவேற்றும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## நித்திய பூஜை சேவைக்கு குருக்கள் தேவை

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் ஆலய பூசகர் சேவைக்கான குருக்கள் ஒரு வருட பதவிக் காலத்திற்கு விண்ணப்பிக்கக் கேட்கின்றோம். குருத்துவ விபரம், தகைமைசார் குருமார் சிபார்சுக் கடிதம், முழுவடிவிலான புகைப்படம் இதரியவற்றை எதிர்வரும் பதினைந்தாம் திகதி (15.12.2002) *குருமகா சந்நிதானம், திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்* எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம். மேலதிக விவரங்களை நா.சர்வேஸ்வரக்குருக்கள், கதிரமலைச்சிவன் கோவில், சுன்னாகம் எனும் முகவரியில் அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் பரிபாலனசபை சார்பாக
**நா.சர்வேஸ்வரக் குருக்கள்**
*சுன்னாகம்.*
(C/25238)

## நன்றி கூறி மகிழ்தல்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானப் பிரதமகுரு சிவஸ்ரீ **Dr.நா.சோமஸ்கந்தக் குருக்கள்** அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி வரவேற்பு விழாவிலும், 'சோமஸ்கந்தம்' நூல் அறிமுக விழாவிலும் சிறப்புக்கள் செய்து, வருகைதந்தும் பெருமைப்படுத்திய தேவஸ்தான தொண்டர் சபையினர், ஊர்மக்கள், ஆலய பரிபாலகர்கள், சிவாச்சார்ய பெருமக்கள், சுற்றத்தவர்கள், அன்பர்கள் மற்றும் நல்லை ஆதீனத்தில் வரவேற்பு உபசாரவிழா சிறப்புறப் பங்காற்றிய குருமகா சந்நிதானம், தர்மசாஸ்தா குருகுலத்தினர், ஏற்பாடுகள் செய்த இந்துகுருமார் ஒன்றியத்தினர், கலந்துகொண்ட பெரியார்கள் அனைவருக்கும் மகிழ்வு தெரிவித்து நன்றிகூறி கடமைப்பாட்டைத் தாழ்மையுடன் தெரிவிக்கின்றோம்.

**நா.சோமஸ்கந்தக்குருக்கள்,**
**நா.சர்வேஸ்வரக் குருக்கள்**
**குடும்பத்தினர்கள்.**
*கதிரமலை,*
*சுன்னாகம்.* (சி-25237)

## கண்ணீர் அஞ்சலி

நுணாவில் கிழக்கு மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கம்,
சாவகச்சேரி பாரதி பாலர் கழகம் ஆகியவற்றின் தலைவி
திருமதி இ.புனிதவதி அவர்களின் பாசமிகு கணவர்

### கந்தையா இராமலிங்கம்

அவர்களின் மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

நிர்வாக உறுப்பினர்
நுணாவில் கிழக்கு மாதர் சங்கம்,
சாவகச்சேரி பாரதி பாலர் கழகம்.
(C/25242)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது கல்லூரி ஆசிரியர்
திரு.வி.செவ்வந்திநாதக்குருக்கள் அவர்களின் தாயார்

### திருமதி வி.கோமேதவல்லியம்மா

அவர்களின் மறைவினால் ஏற்பட்ட துயரில் நாமும் பங்கு கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நலன்புரிக்கழகம்,
யா/சுன்னாகம்ஸ்கூரர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி.
(11389)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
11
-
11
-
1952



மறைவு
22
-
10
-
2002

### அமரர் கந்தையா சிறீஸ்கந்தராசா

அப்பா! உங்கள் அரவணைப்பை மறந்து
நாற்பந்தைந்து நாள் எப்படியோ கழிந்ததப்பா?
நம்பமுடியவில்லை! இது எப்படி நடந்ததப்பா?
ஆசையுடன் எமை வளர்த்த அன்பான அப்பாவே!
இன்பமாய் வளர்ந்த எமக்குப் பேரிடி விழுந்ததப்பா!
எம் உயர்வு காணவென ஓயாது உழைத்தீர்களப்பா!
பிஞ்சுகளாய் நாமிருக்க செந்தணலில் வெந்ததேன்
மறக்கமுடியவில்லை அப்பா!
நினைக்க நினைக்க நெஞ்சம் நோகுதப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென
இறைவனை வேண்டுகிறோம் அப்பா!

*4ஆம் குறுக்கு வீதி,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*
(11386)
*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

## 'அறிவுச்செல்வம்' போட்டியில் பரிசு பெற்றவருக்கு

தமிழ் தொலைக்காட்சி இணையம்(ரி.ரி.என்) நடத்திய 'அறிவுச் செல்வம் 2002' போட்டியில் கலந்துகொண்டு ஆயிரம் ரூபாவுக்கு மேல் பரிசு பெற்றவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியுடன் தொடர்புகொண்டு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பத்தைத் தங்களுக்குரிய சேமிப்புப் பத்திரத்தில் இட்டுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் 2223919 அல்லது 0777731815 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

'அருணலு' சேமிப்புக் கணக்குப் புத்தகத்தை ஏற்கனவே வைத்திருப்போர் அதைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும் தமிழ் தொலைக்காட்சி இணையம்(ரி.ரி.என்) யாழ்கிளை அறிவித்துள்ளது. (ஒ-8)

## ஆரியகுளத்தை மூடிப்படரும் ஆகாயத் தாமரை

கொழும்புத்துறை,டிசெ.5

யாழ்.நகரின் மத்தியில் உள்ள ஆரியகுளத்தின் மேற்பகுதி முழுவதும் ஆகாயத்தாமரை படர்ந்துள்ளது.

இதனால் நுளம்புகள் பெருகுவதுடன் பொதுமக்களுக்குப் பல நோய்கள் ஏற்படும் நிலை உருவாகலாம் எனக் கூறப்படுகிறது. (ஒ-30)

## பளைப்பிரதேச கல்விமான்களுக்கு!

தென்மராட்சி,டிசெ.5

பளை அஞ்சல் அலுவலகத்திற்கான ஆலோசனை சபை விரைவில் அமைக்கப்படவுள்ளது. இந்த ஆலோசனைச் சபையில் இணைவுள்ள பிரதேச கல்விமான்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அஞ்சல் அதிபர் கேட்டுள்ளார். (ஒ-117)

## 3 மீனவர்களுக்கு பிணை அனுமதி

காங்கேசன்துறைப் பகுதியிலுள்ள உயர்பாதுகாப்பு கடற்பரப்பினுள் அத்துமீறிப் புகுந்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் பெயரில் தொண்டமனாற்றைச் சேர்ந்த மூன்று கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் காங்கேசன்துறைப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

தொண்டமனாறைச் சேர்ந்த கிருபாமூர்த்தி சுயதீபன் பொன்னுச்சாமி செந்தில்நாதன், தம்பிஜயா பிறேம்குமார் ஆகிய அந்த மூவரும் காங்கேசன்துறைப் பொலீஸாரால் நேற்றுமுனதினம் மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இம்மூவரையும் மன்று ஏற்றுக்கொள்ளக்கூடிய 5ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லும்படி நீதிபதி கட்டளையிட்டுள்ளார். (ஒ-86)

## IEECD

131/1, அரசடி வீதி,
கந்தர்மடம்.

### ஆங்கிலம்

தரம் 6 - O/L - A/L வரை
ஆரம்பம்:
இன்று 05.12.2002
ஆசிரியர்:-
திரு.க.றமணதாசன்

குறிப்பு:- எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட O/L மாதிரி வினாத்தாளில் 90 வீதமானவை நேற்று நடந்த க.பொ.த. பரீட்சையில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (11392)

## ஆசிரியர் தேவை

தரம்10, 11இற்கு தமிழ்ப் பாடம் கற்பிக்க ஆசிரியர் தேவை.
*தொடர்பு:* S.ஈஸ்வரி
குமரன் கல்வி நிலையம்
*நாச்சிமார் வீதி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய்.*
(11394)

## விற்பனைக்கு

ரயர்க்கடைக்கும், சேர்விஸ் ஸ்ரேசனுக்கும் பாவிக்கக் கூடிய நல்ல நிலைமையிலுள்ள கொம்பிறசர் (ENGLAND MAKE 6 HP) சகல உபகரணங்களுடனும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
T.R.இந்திரன்
கண்டிவீதி, கொடிகாமம்.
T.P-070-212490
070-212282 (11361)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சொர்ணம்மா செல்லத்துரை
(அக்கம்மா)

நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரான சொர்ணம்மா செல்லத்துரை 04.12.2002 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மாட்டீன் செல்லத்துரையின் (பெயின்ரர் செல்லத்துரை) அன்பு மனைவியும் பிறேமா, சறோ ஆகியோரின் அன்புத் தாயாரும் சி.பி.ம.ஆரோக்கியநாதரின் சிறிய தாயாரும் பாலா, மங்களதாஸின் மாமியாரும் பபிதா, றஜிதா, நேருஜா, குயிலினியின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அக்னெஸ், மாணிக்கம், மேரி மற்றும் யோசவ் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எமது இல்லத்தில் இருந்து இன்று (05.12.2002) வியாழக்கிழமை பி.ப.4.00 மணிக்கு யாழ்ப்பாணம், றக்கா வீதியிலுள்ள புனித திரேசாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின் நல்லடக்கத்திற்காக புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*44, மருதடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (11398)
தகவல்:
**பிள்ளைகள்.**

## சின்னத்துரை நல்லமுத்து

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நல்லமுத்து 02.12.2002 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் சி.பவளகாந்தன் (ப.நோ.கூ.ச. முகாமையாளர்), சச்சிதானந்தம் (சுவிஸ்), வரதலக்சுமி (முழங்காவில்), வரலக்சுமி (லண்டன்), சத்தியலக்சுமி (கனடா), இந்திராணி (கனடா), நித்தியலக்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மலர், புவனேஸ்வரி, தர்மலிங்கம், சிவராஜா, தர்மராஜா, றஞ்சனகுமார், சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் (காலஞ்சென்ற கோபிகா), பனோஜன், பிரதீஸ், ரஜீவ், தனுஷா, சுமிதா, துஷிதா, கஜன், லவன், டான்சி, லக்ஷன், றமித்தா, மிதுஷன், ராகவி, அஞ்சலீனா, கௌதமன், கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2002) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலிச் சந்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (11396) சி.பவளகாந்தன் (மகன்)

## இராமலிங்கம் இராசையா செல்லையா
(R.R.SELLIAH)

*(இளைப்பாறிய வருமான வரித்திணைக்கள உத்தியோகத்தர்)*

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையில் வசித்தவரும் தற்போது சேச் லேன், கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான இராமலிங்கம் இராசையா செல்லையா (சின்னத்துரை) 02.12.2002 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கந்தரோடை காலஞ்சென்ற குமாரசாமி - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் பிறேமாணந்தி, நந்தகோபால் (நோர்வே), சுதாணந்தி (நோர்வே), இராஜகோபால் (நோர்வே), செல்வாணந்தி (நோர்வே), பத்மாணந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகராசா (ப.நோ.கூ.ச., பண்டத்தரிப்பு), பகீரதி (நோர்வே), அலெக்ஸ் (நோர்வே), அமிர்தா (நோர்வே), சுரேஸ்குமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசதுரை, காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்வராசா, சிவபாக்கியம், துரைசிங்கம் ஆகியோரின் சகோதரரும் பிரசாந், சங்கமி, சாஜகி, டனிசுஜே, அனோஜன், அஞ்சலி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காகக் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பிரசாந்தி", 5, சேச் லேன்,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*
*T.P.: 5053* (11401)
தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## திருமதி சீவரத்தினம் சரஸ்வதி

கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியைச் சேர்ந்த திருமதி சீவரத்தினம் சரஸ்வதி அவர்கள் நேற்று (04.12.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சீவரத்தினத்தின் அன்பு மனைவியும் கணேசலிங்கம் (சவுதி அரேபியா), விக்கினேஸ்வரி, கோணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரகுமார் (சுங்கத் திணைக்களம், யாழ்ப்பாணம்), லீசா (பிலிப்பைன்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சோமசுந்தரம், தையல்நாயகி, இராசேஸ்வரி, ஆனந்தகணேஸ், தட்சணாமூர்த்தி, சுப்பிரமணியம், சறோஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர்களான இராசையா, குணரத்தினம், இராசரத்தினம் (சோதிடர்) மற்றும் தங்கம்மா, அன்னம்மா, இரத்தினம், ஞானரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிரியராஜ், ாலிஷா, ஷிலக்ஷா, ஷிலோஷிகா (பிலிப்பைன்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.12.2002) வியாழக்கிழமை பி.ப.1.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மணியர்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு.*
(11400)
பொ.சீவரத்தினம் (கணவர்),
பூ.சந்திரகுமார் (மருமகன்- சுங்க இலாகா, யாழ்ப்பாணம்.)

## திருமதி துரைச்சாமி கமலாவதி

நாரந்தனையைச் சேர்ந்த துரைச்சாமி (கனகலிங்கம்) அவர்களின் அன்பு மனைவி கமலாவதி அவர்கள் நேற்று (04.12.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மகேந்திரன், ரவீந்திரன், நரேந்திரன், பாலேந்திரன், இந்திரா, காலஞ்சென்ற சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அனுஷியா, கௌரிநாயகி, பத்மஜா, மேனகா ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன், லலிதா, கிருஷ்ணா, ஆதவன், கௌசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பாலசிங்கம், பத்மாவதி, இராஜசிங்கம், பத்மநாதன் (கொழும்பு), சபாரெட்ணம் (கொழும்பு), பாக்கியநாதன் (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2002) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.துரைச்சாமி (கனகலிங்கம் - கணவர்)
*இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்.*
*நாரந்தனை.* (11402)

நல்லூர் நனை நூலகம்


**நிறைஞ்சனாஸ்** சங்கானை

Van Damme நடித்த

**BLACK EAGLE**

(ஆங்கிலம் - ரீல்ஸ்)

காட்சிகள்: (பு.நே.) 11.00, 2.45, 6.00, 7.45

06.12.2002 முதல் நேருக்குநேர் (C/25185)

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜுன், தபூ, சார்லி, கவுண்டமணி நடித்த

**தாயின் மணிக்கொடி**

காட்சிகள்: 11.00, 3.00 (ரீல்ஸ்)

விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்) (11405)

**ராஜா** யாழ்ப்பாணம்.

அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த



**வில்லன்**

(ரீல்ஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்) (C/25...)

**லஷ்மி** இணுவில்

அஜித் (9வேடங்களில்), வசுந்தரா தாஸ் நக்மா நடித்த

**சிட்டிசன்**

(ரீல்ஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே.) (11426)

**கிறிஸ்ரல் சென்ரர்** நெல்லியடி

**A/L DAY CLASS**

☆ வணிகப்புள்ளிவிவரவியல் மு.ப.9.00 மணி

☆ எழுதுவினைஞர் பரீட்சைக்கான மீட்டல்வகுப்பு

ஆரம்பம்: மு.ப.10 மணி

யாழ். ஆசிரியர் தவசேகர்.

ஆரம்பம்: இன்று 5.12.02 (C/25253)

**CHIRISTMAS NEW YEAR SALE**

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

இன்று 05-12-2002 முதல் 31-12-2002 வரை

சகல புடைவைத் தினுசு வகைகளுக்கும்

விசேட கழிவு வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம்**

(பஸ் நிலையம் முன்பாக)

410, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

☎ : 222 2381

(C-25250)

**தரம் 03 - O/L வரை**

**புதிய அனுமதிகள்!!**

**வழங்கும் இறுதிநாள் இன்று மட்டுமே!**

இதுவரை அனுமதிபெற்ற அனைவரும் பெற்றோருடன் நாளை (வெள்ளி) காலை 9.00 மணிக்கு தவறாது சமுகந்தரவும்.

(11379) அதிபர்.

**English Academy**

210, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.

T.P.:-021-2222588

★தரம் 6 முதல் A/L , பல்கலை மற்றும் அலுவலர் வரை 2003 ஆம் ஆண்டுக்கான ஆங்கில வகுப்புகள் மட்டும் இன்று 05.12.02 முதல் ஆரம்பம்.

★காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை பதிவுகளை மேற் கொள்ளலாம்.

★மாணவர்களின் சுய கற்றலுக்கு இடையூறு விளைவிக்காமலிருக்க வாரத்தில் இரு வகுப்புகள் மட்டும்.

ஆசிரியர்

K.T.Rajah

Why fear! we are here

யாமிருக்கப் பயமேன்! (11377)


# மரண அறிவித்தல்

## திருமதி கணபதி சின்னம்மா

கட்டப்பிராய், விளையாட்டரங்க வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதி சின்னம்மா அவர்கள் நேற்று (04-12-2002) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தவராசா (ஞானம்ஸ் லொறி உரிமையாளர்) மற்றும் புஸ்பராசா, தங்கராசா (இலங்கை வங்கி 2ஆம் கிளை),குணராசா, வரதராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாக்கியம் (பூமாதேவி -இந்தியா), கமலா, அழகேஸ்வரி, ரதிராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற சின்னப்பு (பழையபூங்கா வீதி)ஆகியோரின் அருமைச் சகோதரியும் விஜயசீலன் (இந்தியா), உதயசீலன் (இந்தியா), மயூரன்(இந்தியா), சுவாசினி(ஜேர்மனி), சுனிதா(ஜேர்மனி), வசந்தரூபி,வனிதா, ராஜ்பிரசாந், ஜெகனா, பிரசன்னா, நிவேதனா, தனுஜா, ரினோஜா, தக்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-12-2002) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

விளையாட்டரங்க வீதி, கட்டப்பிராய். (11413) க.குணராசா (மகன்)

## சாவகச்சேரி நகரசபை
## மீள் கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் பின்வரும் ஆட்டிறைச்சிக் கடையினை 2003 ஆம் ஆண்டுக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக, 01.01.2003 ஆம் திகதி முதல் 31.12.2003ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி வழங்கும் இறுதித்திகதி :- 18.12.2002 புதன்கிழமை நண்பகல் 12.00 மணி

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி :- 23.12.2002 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி

| விவரம் | கடை இல. | கேள்விப் பிணைப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. ஆட்டிறைச்சிக் கடை. | என்.எம்.எஸ். 1 | ரூ 1000/- | ரூ 50000/- | ரூ 200/- உம் 20% பெறுமதி சேர்வரியும் |

மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
04.12.2002

(C/25252)

பெ.தனபாலசிங்கம்.
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி.


**வலி.மேற்குவாழ் ஆங்கிலப் பிரியர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி!**

அழகு தமிழை தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பிக்கும் கலையின் காரணமாக மக்களின் மனங்களைக் கவர்ந்த "**ENGLISH ACADEMY**" 07.12.2002 முதல் சித்தங்கேணியிலும் (பாரதி கல்வி நிலையத்திற்கு முன்) தனது பாதங்களை பதிக்கவுள்ளது.

மாணவமணிகளின் மனங்களில் குடிகொண்டுள்ள 'ஆங்கிலம்' என்ற அச்சத்தை அகற்றி, அதில் அடைவு மட்டத்தை உயர்த்துவதே எமது தலையாய நோக்கம். இதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் அவாவுடன் எதிர்பார்ப்பதுடன், பெறுமதிமிக்க விமர்சனங்களையும் மனமுவந்து வரவேற்கிறோம்.

தரம் 6 முதல் A/L, பல்கலை மற்றும் அலுவலர் வரை காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.

English Academy

E.mail: thangan 672002 @ yahoo.com

T.P.: 021-222 2588

210, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
Director

கிளை:- சித்தங்கேணி
Teacher
K.T.ராஜா (SS)

Why fear! we are here; யாமிருக்கப் பயமேன்! (11376)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பார்வதி கந்தப்பு

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி கந்தப்பு அவர்கள் நேற்று (04.12.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு ஆசிரியர் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வள்ளிநாயகி மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பொன்.சத்தியமூர்த்தியின் அன்பு மாமியாரும் ச.மயூரனின் அருமை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2002) வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிழல்வாடி,
கரவெட்டி மேற்கு,கரவெட்டி. (C/25262)

தகவல்:
ச.மயூரன் (பேரன்)

## கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 18A, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் அவர்கள நேற்று(04-12-2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் குணமணி அவர்களின் அன்புக் கணவரும் திருப்பதி,பரஞ்சோதி, சிவபாதலிங்கம் ,திலகவதி ஆகியோரின் சகோதரரும் ரவிதாஸ் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான ஸ்ரீ ரஞ்சினி உதயதாஸ் மற்றும் சிவதாஸ (பிரான்ஸ்), வனதாஸ் ,யசோ ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் விஜிதா (ஜேர்மனி), சசி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுந்தரதாஸ் ஆகியோரின் மாமனாரும் ஜேர்மனியில் வசிக்கும் ரஜிதா, நஜிதா ,கஜிதா மற்றும் பிரான்ஸில் வசிக்கும் அருந்தாஸ் ,அகில்தாஸ், அருளினி மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கஜமுகன் ,விவேகாஜினி, சுஜிதாஸ் ,விஜிதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-12-2002) வியாழக்கிழமை பி.ப.4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18A, ஆஸ்பத்திரி வீதி
கொட்டடி,
யாழ்ப்பாணம். (11422)

தகவல்:
குணமணி
(மனைவி)

## திருமதி சுப்பிரமணியம் தில்லைநாயகி

(ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் தில்லைநாயகி நேற்று (04.12.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் க.சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சீவரத்தினம் - சரஸ்வதி தம்பதியினரின் அருமை மகளும் இராஜேஸ்வரி (மீனா), காலஞ்சென்ற தயாபதி ஆகியோரின் அன்புத் தாயாரும் க.இராசரத்தினம் (சிங்கம்), தா.சிவலிங்கம் ஆகியோரின் மாமியாரும் உஷாநந்தினி, காலஞ்சென்ற சுகுமாரன், ஷாமினி, நாகப்பிரேமன், அருணோதயன், பவித்திரன், லோகேஸ்வரன் (அப்பன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2002) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளானை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
(C/25261)

தகவல்:
க.சுப்பிரமணியம்
(தில்லை மணியம்)

## பிரகாசம் தானியேல்

மல்வம், உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாசம் தானியேல் நேற்று (04.12.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி திரேசம்மாவின் அன்புக் கணவரும் திருமதி தம்பிராசா மரியம்மா, வேலாயுதம் பொன்னரியம், திருமதி துரைசிங்கம், பிலோமினம்மா, ஜேம்ஸ் செல்வராசா, பேரின்பம் செபமாலை, சூசைநாதர், பத்திநாதர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் வேலாயுதம், துரைசிங்கம், திருமதி நேசநாயகி, திரேசம்மா, செல்வமலர், பேட்டில்லாதிலகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (04.12.2002) புதன்கிழமை நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மல்வம்,
உடுவில். (11415)

தகவல்
தா.பத்திநாதர்(மகன்)

## மாதர் நாகலிங்கம்

(முன்னாள் மருந்தாளர் - யாழ். அரசினர் வைத்தியசாலை)

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாதர் நாகலிங்கம் நேற்று (4.12.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சுலோசனாவின் அன்புக் கணவரும் சிவபுரத்தரசி (கொக்குவில இந்து), ரோகினி (வேம்படி மகளிர்), கீர்த்திகா (பூனியன் கல்லூரி), கோபிதா (இராமநாதன் கல்லூரி), சிவஞானச்செல்வன் (நாகேஸ்வரி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஐயா, குமாரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரனும் சியாமளா சிரோநினி, திருக்கேதீஸ்வரன், ஸ்ரீதரன் (சவூதி அரேபியா), ஸ்ரீகரன் (ஆசிரியர், விபுலானந்தா கல்லூரி - திருமலை), ஸ்ரீநிரஞ்சன் (ஆசிரியர், மண்டைதீவு), ஸ்ரீசெல்லகாந்தன (கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.12.2002) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம். (11424)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## மயிலு கதிரமலை

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் வெல்வத்தை நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட மயிலு கதிரமலை நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் சீதேவியின் அன்புக்கணவரும் நாகராசாவின் பாசமிகு தந்தையும் துர்க்காதேவியின் மாமனாரும் மூத்ததம்பி, பராசக்தி, அன்னலட்சுமி, சண்முகதாஸ் ஆகியோரின் சகோதரரும் தேனுஜா, தர்சோஜன், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-12-2002) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இறுதிக் கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.நாகராசா
(மகன்-சிவசக்தி சிகை அலங்காரநிலையம்நெல்லியடி)

(C/25258)



பீற்றர்ஸனுடன் பாலா கைலாகு கொடுக்கும் காட்சி.

# ஜனாதிபதியைச் சந்தித்து அதாவுல்லா குழு பேச்சு!

## நள்ளிரவில் 3 மணி நேரம் நடந்தது

கொழும்பு,டிசெ.5

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இரு பிரிவினருக்கிடையிலான மோதல் மேலும் தீவிரமடைந்து வருகிறது. கட்சியின் புதிய தலைவர்கள் நேற்றுமுன்தினமிரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து தமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தியிருக்கின்றனர். ரவூப் ஹக்கீம் அமைச்சர் பதவியிலிருந்தும் அகற்றப்படுவதை அவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர் என அறியப்படுகிறது.

ஜனாதிபதியை நள்ளிரவில் சந்தித்த முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைவர்கள், கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ரவூப் ஹக்கீமை அகற்ற நேரிட்டதற்கான காரணங்களை விளக்கிக் கூறியிருக்கின்றனர். கட்சித் தலைவர் பதவியிலிருந்து ரவூப் ஹக்கீமை இடைநிறுத்திவைக்கும் நீதிமன்றக் கட்டளை ஒன்றைத் தாங்கள் பெற்றுக்கொண்டிருப்பதையும் அவர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர். இச்சந்திப்பு சுமார் மூன்று மணி நேரம் நீடித்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைவரான கலைத்தீன் ஹாஜியார், தவிசாளர் ஏ.எல்.எம் அதாவுல்லா, பொதுச் செயலாளர் டாக்டர் ஹப்ரத் எம்.பி., பிரதியமைச்சர் நூர்தீன் மசூர், அரசியல் அதிகாரபீட உறுப்பினரான நஷீர் அஹமட் ஆகியோரே ஜனாதிபதியைச் சந்தித்திருக்கின்றனர்.

பொ.ஐ.முன்னணி பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், முன்னாள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.சுஹைர், சட்டத்தரணி ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோர் ஜனாதிபதி தரப்பில் இந்த ஆலோசனைகளில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசில் அங்கம் வகிப்பதாலும் ரவூப் ஹக்கீம் கட்சியின் தலைவர் என்பதாலுமே அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இப்பொழுது ரவூப் ஹக்கீம் கட்சித் தலைவர் பதவியில் இல்லை. அதனால் அவர் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

ரவூப் ஹக்கீம் வகித்த அமைச்சுக்களின் பொறுப்புக்களைப் பிரித்து, தாங்கள் குறிப்பிடும் மூவருக்கு அப்பொறுப்புக்களை வழங்குமாறும் அவர்கள் ஜனாதிபதியைக் கோரியிருக்கின்றனர்.

அவர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து பார்க்க ஜனாதிபதி இணங்கினார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ-4)

# இலங்கை நாடாளுமன்றத்தில் ஜப்பானிய குழு முறை

கொழும்பு,டிசெ.5

ஜப்பானில் தற்போது அமுலில் உள்ள குழுமுறை இலங்கை நாடாளுமன்றத்திலும் அமுல்செய்யபடவிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் உள்ள இந்தக் குழு முறையின் மூலம் அந்நாட்டு நாடாளுமன்றத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சிறந்த முறையில் பங்காற்றி வருவதாகவும், இந்த முறையானது நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தும் எனவும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். இதுகுறித்து விரிவாக அறிந்துகொள்வதற்கென ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று விரைவில் ஜப்பானுக்குச் செல்லவிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார் (ஐ-4)

## புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

"புலிகள் இயக்கம் இன்று ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில ஆர்வம் கொண்டுள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் முன் எப்போதும் இல்லாத பரஸ்பர புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது." என்றும் பிரதமர் பதில் சொன்னார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலையுடன் நேரடித் தொடர்பு கொண்ட புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனாலேயே இந்தியா ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்றும், இலங்கைக்கு உதவிகளை வழங்கத் தயங்குகிறது. என்றும் கூறப்படுவது சரியா? என்று மற்றொரு கேள்வி எழுப்பப்பட்டது.

அண்டை நாடான இந்தியாவின் பங்களிப்பு இன்றி சமாதான முயற்சியில் நாம் இவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்க முடியாது. சமாதான முயற்சிகளுக்கு மட்டுமன்றி அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பெரும் உதவிகளை இந்தியா வழங்கி வருகிறது என்று பிரதமர் அக்கேள்விக்குப் பதிலளித்தார்.

ஒஸ்லோ மாநாட்டின் பின் அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவுக்குச் சென்று பல சிரேஷ்ட அமைச்சர்களையும் சந்தித்துள்ளார். இலங்கை - இந்திய உறவு மிகவும் சிறப்பாகவே இருக்கின்றது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (ஐ-4)

## லொறியினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றில் வேலை செய்துவரும் இவர் வேலை முடிந்து சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை ஆஸ்பத்திரி வீதியிலிருந்து வந்து திரும்பி கஸ்தூரியார் வீதியூடாக வின்சர் சந்தியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று இவரைப் பின்புறமாக மோதியது என்று கூறப்படுகிறது. தரையில் வீழ்ந்த யுவதி லொறியின் முன்புற சில்லுக்கிடையே நசியுண்டார். வயிற்றுப் பகுதி சிதைவடைந்து பெருமளவு இரத்தம் வெளியேறிய நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அவரது உயிரைக் காப்பாற்றுவதற்கு டாக்டர்கள் குழு ஒன்று தீவிரமாக முயன்றது. எனினும் சிகிச்சை பலனளிக்காது அவர் அங்கு உயிரிழந்தார்.

விபத்து நடந்த இடத்தில் கூடிய பொதுமக்கள் ஆத்திரமடைந்து லொறிச் சாரதியைத் தாக்கத் தொடங்கினர்.

அராலி செட்டியாமடத்தைச் சேர்ந்த கே.இராசதுரை (வயது 63) என்ற அந்தச் சாரதி காயங்களுடன் பின்னர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

விபத்துச் சம்பவம் குறித்து தகவல் அறிந்த யாழ். பொலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பந்தப்பட்ட லொறியையும் பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். உயிரிழந்தவரின் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை என்பன இன்று நடைபெறும் என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

இதேவேளை

விபத்து நடைபெற்றவேளை சாரதி மதுபோதையில் இருந்தாரா என்பதை அறிந்துகொள்வதற்காக அவர் இன்று மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4)

## உப குழு உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த உபகுழு கையாளவேண்டிய பணி பன்முகமானது. எனவே உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்தக்குழுவின் நடவடிக்கைகளைச் சரியாக மேற்கொள்வதற்கு வசதியாக கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும்" என்று புலிகளின் தரப்பில் பங்குபற்றிய கேணல் கருணா வலியுறுத்தினார்.

அதனடிப்படையில் அரசுத்தரப்பிலும் புலிகள் தரப்பிலும் உபகுழுப் பிரதிநிதிகள் எண்ணிக்கையை ஒவ்வொன்றால் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது.

புலிகள் தரப்பில் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் புதிய உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

ஏற்கனவே புலிகளின் தரப்பில் இக்குழுவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், வே.பாலகுமாரன், பூவண்ணன், ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கை அரசுத்தரப்பில் பிரதமரின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக தலைமையில் இரண்டு முஸ்லிம்கள் உட்பட நால்வர் இக்குழுவில் இடம்பெற்றிருப்பது தெரிந்ததே.

இந்த உபகுழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்துவது குறித்து முஸ்லிம்களின் தரப்பில் அமைச்சர் ஹக்கீமின் ஆலோசகராகவும் வள ஆளணி உறுப்பினராகவும் கலந்து கொண்ட எம்.ஐ.எம்.முகைதீனும் பேச்சுக்களின் போது கருத்து வெளியிட்டார்.

"முன்னைய முடிவின்படி அரசுத்தரப்பின் சார்பில் உபகுழுவில் இடம்பெறும் நான்கு உறுப்பினர்களின் சரி அரைவாசி இடம் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டது. இப்போது உறுப்பினர் எண்ணிக்கையை ஐந்தாக உயர்த்துகின்றீர்கள். அதனால் முஸ்லிம்களின் நிலைமை பாதிக்கப்படும். அதுவும் அமைச்சர் ஹக்கீம் பேச்சுக்களில் பங்குபற்றாத சமயத்தில் இதைத்தீர்மானிப்பது முறையற்றது. தேவையானால் அரசு புலிகள் இரண்டு தரப்பின் சார்பிலும் உபகுழுவில் இடம்பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை தலா இரண்டால் அதிகரியுங்கள். அரசுத் தரப்பில் கூடுதலாக நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்களில் ஓரிடத்தை முஸ்லிம்களுக்கு வழங்குங்கள். என்று வலியுறுத்தினார் முகைதீன்.

அவரது கருத்தைப் பரிசீலிப்பதாக அங்கு பதிலளிக்கப்பட்டது. எனினும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை தலா ஒன்றால் அதிகரிப்பது என முடிவில் மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

(ஐ)


அதிரடி வெளியீடு
நேற்று நடைபெற்ற
O/L ENGLISH
வினாத்தாள்
இன்றே உங்கள் கைகளில்
விடைகளுடன்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம், குபன், துர்க்கா (சுன்னாகம்), பிரியங்கா, நாவலர் (பருத்தி), அறிவமுது (வன்னி).
(11425)

I.B.S கல்வி நிறுவனம்
இல.1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி
கல்வியாண்டு - 2003
தரம் 1முதல் O/Lவரை
இன்றுமுதல் ஆரம்பம்
நேரம் : 3.30 மணி.
(11523)

N.E.I
நல்லூர்
புதிய வகுப்புகள்
தரம் 3 - O/L, A/L வரை
ஆரம்பம் : இன்று 05.12.2002
மாலை 3 மணி.
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

Computer College
கணனிக் கல்லூரி
Center for Computer Studies
337, Kasthuriyar Road, Jaffna
E - Mail : collegeofcom@bharatmail.com
Phone & Fax : 021 - 2223497
கணனி கற்கைகள்
கணனி பராமரிப்பு
கணனி விற்பனை
இணைய சேவைகள்
2004 உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கென கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுத் தகவல் தொழில் நுட்ப ( GIT ) பாடத்திட்டத்துக்கான கற்கைகளை யாழ்.மாவட்டத்தில் முதன்முதலாக ஆரம்பித்த பெருமையுடன் இரண்டாவது வருடத்தில் காலடி பதிக்கின்றோம்..
2005 பிரிவுகள்
15 - 12 - 2002 ஞாயிற்றுக்கிழமை
காலை - 10.00 மணி
மாலை - 3.30 மணி
ஏனைய புதிய பிரிவுகள் :
Diploma Courses:
Dip. in. Microsoft Office
Dip. in. Desktop Publishing
Dip. in. Web Designing
Certificate Courses in: இரண்டாவது பிரிவு ஆரம்பம்: 08 - 12 - 2002
Ms - Word, Ms - Excel, Ms - Power point, Ms - Access, Corel DRAW, PageMaker, Photoshop & Internet - E mail.
பாடசாலை சிறார்கள் விடுமுறையை விருப்புடன் கழிப்பதற்காக டிசெம்பர் 01 ஆம் திகதி முதல் முற்றிலும் வித்தியாசமான Kids Computing கற்கை நெறி ஆரம்பமாகியுள்ளது.
www.computercollege.ac.lk

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய்
கணிதம்: V.N.பத்மநாதன், B.குகதாசன்
விஞ்ஞானம்: A.தயேசன், T.தீபன்
தமிழ் : N.கணேசமூர்த்தி, S.கண்ணன்
ச.கல்வி : S.ஜெயா, S.சந்திரன், T.அரங்கன்
ஆங்கிலம் : Y.விஜயபாஸ்கர், S.சூரி
வர்த்தகம் : S.நித்தி
சமயம் : T.ஸ்ரீ, S.கண்ணன்
சுகாதாரம் : M.முகுந்தன்
தரம் 3 முதல் O/L வரை
கல்வியாண்டு 2003
ஆரம்பம்: 05.12.2002 இன்று காலை 8.30மணி.
குறிப்பு : வாரத்தில் 8 மணித்தியாலம் கணிதம் நடைபெறும்.
- நிர்வாகி.
(11363)

கீன் சென்ரர்
பலாலி வீதி திருநெல்வேலி
கணிதம் : V.N. பத்மநாதன், B.குகதாசன், S.சதானந்தன்
விஞ்ஞானம்: V.I.S.செல்வன், திரு.நிரஞ்சன்
தமிழ் : N.கணேசமூர்த்தி, S.கண்ணன்
ச.கல்வி : S.சங்கர், திரு.திவாகரன்
ஆங்கிலம் : S.சூரி, S.பரமேஸ்வரன்
வர்த்தகம் : S.நித்தி
சமயம் : T.ஸ்ரீ, S.நவநீதன்
சுகாதாரம் : S.கலைமதி
தரம் 6 முதல் O/L வரை
கல்வியாண்டு 2003
ஆரம்பம்:05.12.2002 இன்று மாலை 4 மணி.
குறிப்பு : வாரத்தில் 8 மணித்தியாலம் கணிதம் நடைபெறும்.
- நிர்வாகி.
(11361)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.